46
45/2
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 JUN 1952
MADRAS

வேலுமயிலும் துணை

# ஸ்ரீ வள்ளி
# மணவெண்பா

SCANNED



SCANNED
O26:31
N52
109812

இயற்றியவர்:
நாகி தாஸர்

உ

வேலுமயிலுந் துணை

ஸ்ரீ வள்ளி

# மணவெண்பா

OFFICE OF THE REGISTRAR ... 13 JUN 1952 ... MADRAS

இயற்றியவரும், பிரசுரகர்த்தரும்

காமாக்ஷி திருப்புகழ், அம்பாள் அஷ்டக மாலை
அம்பாள் திருவகுப்பு, தேவீ கிளித்தூது சதகம்
அம்பாள் திருப்பள்ளி யெழுச்சி, அலங்காரம்
அநுபூதி, அருட்பாவை, கவசம்
போற்றி, வாழ்த்து, குங்குமப்பஞ்
சதசி, சௌந்தர்யலகரி மொழி
பெயர்ப்புப்பா, பகவத் கீதை
பொருட்பா முதலிய

இயற்றிய

காமாக்ஷி தாஸர்

(R. சோமசுந்தரம் அய்யர், பி.ஏ., பி. எல்.
அட்வகேட், 10ஜி, எட்வர்டு எலியட்ஸ் ரோடு,
மைலாப்பூர், சென்னை.)

காபிரைட்
All rights Reserved

1952

விலை 1-0-0

# சமர்ப்பணம்

வண்டார் மலர்மாலே மார்பிலணி வாணியே
வெண்டா மரையாளே வேண்டிநான் – தண்டமிழால்
தூயவெண் பாக்கொண்டு சொன்னவிப் பாமாலே
நேயமுடன் சூடியருள் நீ.

## அவை யடக்கம்

கங்கைவெள்ள நீரிருந்துங் கானல்விடாய் நீக்குதற்கே
இங்குலகங் கையூற்றும் ஏற்குமாற்–பொங்கிவரும்
என்கவியு மேற்பீரே யீடிலாப் பாவலர்காள்
புன்கவியென் ஞேராப் புகழ்ந்து. 1.

பொன்னே யுருக்கியது போன்மேனிச் சண்முகன்பால்
என்னே யுருக்கி யிசைத்தனஞல்–அன்னமெனக்
குற்ற மகற்றிக் குணங்கொள்வீர் கற்ருேரே
சற்றென் கவிக்குமிடந் தந்து. 2.

ஞாபகார்த்தமாக

எனது மூத்த குமாரன் காலஞ்சென்ற சங்கர் என்ற S. பால சுப்ரமணியன் ஞாபகார்த்த மாக.

## பாராட்டுப் பாக்கள்.

சருமபுரம் ஆதீன வித்வானும் "ஞானசம்பந்தம்" உதவி ஆசிரியருமான திருவாளர் ச. தண்டபாணி தேசிகர் **18-3-1951**ல் எழுதி அனுப்பிய பாராட்டுப் பாக்கள்.

தெள்ளு தமிழ்ப்புலவர் சீர்சோம சுந்தரனார்
வள்ளி மணவெண்பா வகுத்துரைத்தார் – ஒள்ளியோர்
உச்சிகொளும் மேலான ஒண்கருத்து மிக்கவிதை
இச்சைகொளார் யாரென் றியம்பு. 1

அம்மை யடிபரவி அன்பால் முருகனடி
செம்மை மனங்கொண்ட சீர்த்தியான் – எம்மைக்கும்
இன்பமாம் வள்ளி மணவெண்பா ஏற்பித்தான்
இன்புலவோர் இன்பமிக இன்று. 2.

அன்றோர் புகழேந்தி ஆர்வத் தமயந்தி
நன்றாம் மணவெண்பா நன்குரைத்தான் – இன்றைக்கு
வள்ளி மணவெண்பா வகுத்தபுக ழேந்தியென
உள்ளிடவே வைத்தீர் உவந்து. 3.

---

## நூன் முகம்

மனிதப் பிறவியின் பயன் வீடு பெறுதல். வீடு பெறுதற்குரிய சாதனங்கள் நான்காகும். அவை ஞானம், யோகம், கர்மம், பக்தி என்பன. இவற்றுள் பக்தி மார்க்கமே கலியுகத்திற் சிறந்ததாகக் கொள்ளப்படும். பக்தி மார்க்கத்தில் எந்த மூர்த்தியை வேண்டுமானாலும் உபாசித்து முக்தி பெறலாம். எனினும் கலியுக வரதனான முருகன் உபாசனை நமது தமிழ் நாட்டிற் குரியது. தொன்று தொட்டு வழங்கி வருவது. எளிதில் இகபர மிரண்டிலும் சுகமளிக்க வல்லது. முருகனருள் பெற்றால் எல்லாம் பெறலாம்.

இவ்வாறு சிறப்பு வாய்ந்த முருகக் கடவுள் வழி பாட்டில் சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக அடியேன் சிறிது ஈடுபட்டு வந்துளேன். அருணகிரி நாதர் அருளிச் செய்த மந்திர மௌனத்தகும் திருப்புகழ், திருவகுப்பு, அலங்காரம், அநுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம் முதலியவைகளைப் பாராயணம் செய்து கொண்டு வரும் நாளில் முருகன் திருவருளால் அம்பிகையின் திருவருளும் தரிசனமும் கிடைக்கப் பெற்றுத் தேவியின் ஆக்ஞையை முன்னிட்டுத் தேவியருளிய வாக்விலாசத்தால் ஸ்ரீகாமாக்ஷி திருப்புகழ், அம்பாள் அஷ்டகமாலை, அம்பாள் திருவகுப்பு, தேவி கிளித் தூது சதகம், திருப்பள்ளி யெழுச்சி, குங்குமப்பஞ்சதசி, வாழ்த்து, போற்றி, கவசம், அருட்பாவை, உந்தியார், அலங்காரம், அநுபூதி, பகவத் கீதை பொருட்பா முதலிய வியற்றினேன். அடியார்கள் இந்நூல்களுக்குப் போதாவளித்துப் பக்தியுடன் பாராயணம் செய்து வருகின்றனர்.

இந்த நூலின் கதை கூடியவரையில் கந்த புராணத்தைத் தழுவியும் சிலவிடங்களில் தொன்று தொட்டு மக்களிடையே வழங்கி வரும் நாரதர் வள்ளி சம்வாதம், வளைச்செட்டி முதலியவும் சேர்க்கப்பட்டும் அமைந்தது பக்தர்களுக்குச் சமரஸ மனப்பான்மை உண்டாகவும் பாராயணம் செய்பவர்களுக்குச் சகல மூர்த்திகளுடைய அருளும் கிடைத்தல் வேண்டும் என்னும் நோக்கத்துடனும் விநாயகர், தேவி, சிவன், விஷ்ணு இவர்கள் சிறப்பும் புகழும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

அடியேன் தமிழ் வல்லேனல்லேன். ஆண்டவன் ஆட்டிவைத்தால் ஆடியும் பாட்டுவித்தால் பாடியும் வருபவன். முருகன் திருவருளை முன்னிட்டு இந்நூல் இயற்றப் பட்டதே யொழிய அடியேன் வல்லமை இங்கொன்றுமில்லை. அவனருளால் இதனை வெளியிடத்துணிந்தேன். இத்துணிவைத் தமிழ் வல்ல பாவலர் மன்னித்துக் குற்றம் நீக்கிக் குணங்கொளல் வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

இந்நூலுக்குக் காகிதம் இலவச மாகத் கொடுத்த பி. ஜீ. பால் கம்பெனி திரு. K. நீலகண்ட அய்யருக்கு முருகனருளால் சர்வா பீஷ்டங்களும் உண்டாகும்படி பிரார்த்திக்கிறேன்.

இந்நூலையும் ஸ்ரீமத் பகவத் கீதை பொருட்பாவையும் ஆர்வத்துடன் சீக்கிரம் அச்சிட்டுக் கொடுத்த மயிலை ரமணி பிரஸ் பக்த சிகாமணி K.S. சுப்ரமணிய அய்யர் அவர்களுக்கும் இந்நூல் முழுவதையும் சிரமத்தைப் பாராமல் பார்வையிட்ட திருவாளர் வித்வான் ச. தண்டபாணி தேசிகருக்கும் எனது நன்றி உரித்தாகும்.

இந்நூலைப் பக்தியுடன் பாராயணம் செய்பவரும் கேட்பவரும், கதையாகச் சொல்பவரும், பிரசாரம் செய்பவரும் முருகன் திருவருள் பெற்றுய்வர் என்பது அடியேன் துணிபு.

இங்ஙனம்

அடியார்க்கடியன்
காமாக்ஷி தாஸர்

R. சோமசுந்தரம் அய்யர்
அட்வகேட்
10 ஜி எட்வார்டு எலியட்ஸ் ரோடு
மயிலாப்பூர். சென்னை
11-5-52

உ

# ஸ்ரீ வள்ளி மணவெண்பா



## விநாயகர் துதி.

வெள்ளை யுளமுள்ளார் வேண்டும் பொருளெல்லாம்
அள்ளிக் கொடுக்கவல ஆனைமுகா—வள்ளி
திருமணச் சீரைவெண் பாக்கொண்டு செப்ப
உருகிடச் செய்வா யுவந்து. 1

வெண்பாவின் வெண்சீரும் வெண்டளையும் நன்கமையக்
கண்பார்த்துக் காத்துக் கரிமுகத்தோய் – பண்பாக
வள்ளிமணம் யான்பாட மாநிலத்தோர் கொண்டாடத்
தெள்ளுதமிழ் தந்துதவி செய். 2.

## கலைமகள் துதி,

கண்டார் வியக்கக் கவிபாட வென்னாவில்
வெண்டா மரையாளே வீற்றிருப்பாய் – கொண்டாடிப்
போற்றினே னுன்னடியைப் பூத்தூவி யென்னெஞ்சம்
ஆற்றுவாய் ஞான மளித்து. 1

உன்னருடா னுண்டாகி லுத்தமியே நாமகளே
என்னகுறை செப்பெனக்கு மிப்புவியில்-உன்னடியை
முப்போதும் பூசிப்பேன் முற்றுமுனை நம்பிநான்
எப்போதும் என்னு விரு. 2

## திருமகள் துதி.

திருபாற் கடல்வந்த சீதேவி யேயுன்
னருட்பார்வை யொன்றுண்டே லன்றே–பொருட்பேறாய்ச்
சீருண்டாம் வாக்குண்டாந் தெய்வ வடிவுண்டாம்
பேருண்டாம் பின்னுண்டாம் வீடு. 1

உன்மகளாம் வள்ளிமணம ஓதிநான் சீர்காண
என்மனத்தின் மாசகற்றி யின்றருள்வாய் — பொன்மகளே
உன்னருடா னின்றே னுலகிலுள மாந்தருக்கே
என்னசுக முண்டா மியம்பு. 2

## காமாக்ஷி துதி.

என்னுளே நீயிருக்க ஈசைகா மாட்சியே
உன்னையும் வேறாக வோதவோ—பொன்னுவாள்
பெற்றெடுத்த வள்ளி பெருமணந்தான் பாடவென்
சிற்றறிவைப் பேரறிவாய்ச் செய். 1

உன்புகழைப் பாட வொருதமிழை யானென்றும்
என்புருகிப் பாட விசைந்தளித்தாய்—முன்புகுகன்
கோலக் குறமகளைக் கூடிமணங் கொண்டவிதஞ்
சாலக் கவிபாடத் தா.

## அய்யனார் துதி.

மெய்யனு யென்குலத்தை மேன்மையுற வைத்தருளும்
அய்யனு ரென்றேங்கும் அண்ணலே — தையலாம்
வள்ளிமணம் யான்பாட வாடாத் தமிழ்க்கவிதை
வெள்ளமெனப் பொங்கிவரச் செய்.

## முருகன் துதி.

குமர குருபரன்றன் நாவி லருள்கூர்ந்து
தமிழை யெழுதியருள் கந்தா—அமைவள்ளி
முன்னு னுனைமணந்த வுத்தமப் பாவுரைக்க
என்னுவி லின்றே யெழுது. 1

பூமாலை சூட்டிநீ போய்மணந்த வள்ளிக்குப்
பாமாலை சூட்டப் பணித்தருள்வாய்—கோமானே
குன்றுதோ றாடுங் குமரா வறுமுகவா
என்றுமே யென்னே டிரு. 2

உ

வேலுமயிலுந்துணை.



# நூல்

## நாட்டுச் சிறப்பு.

பூமகளின் நாட்டம் புவிமகளுக் குற்றதென
மாமலைசூழ் நாட்டின் வளங்கண்டு — காமமிகுந்
திங்களுமே வாடிடவுஞ் செங்கதிரோன் வந்துதித்தான்
மங்களந்தான் காண மலர்ந்து. 1

செங்கரும்பே நாடியுணுந் திண்டியினம் பீதியுறச்
சிங்கமிடுங் கர்ச்சனைசேர் தீவொலிக — ளெங்குமெழும்
பாய்வேங்கை கையறையாற் பட்டிறந்த புல்வாயை
வாயேந்திச் செல்லும் வனம். 2

தேனும் புளித்திடவே தீங்கனிக ளீந்துயா
வானுந் தழைந்ததென மாமரஞ்சேர்க்—கானுலவி
மான்வகையு மற்றுமுயிர் வாழ்வனவு மாய்த்தவர்கள்
ஊன் மிகவு மாக்கிடுவோ ரூர். 3

நீர்வளஞ்சேர் பைம்புனத்தே நின்றோங்குஞ் செம்பாண்கள்
சீர்விளங்கு மந்நாட்டின் செம்மக்கள்—பேர்விளங்கக்
கூடிக் குதித்தரிய கும்மிபல பாடிநட
மாடிக் களித்திடுவா ராங்கு. 4

விற்றோள் பிடித்தோங்கி வேடர்வன மேகிடவும்
நற்றோள் படைத்தவெழில் நங்கையரும்—பற்றுடனே
செந்தினையே காக்கச் செருக்குடனே சென்றிடுவர்
அந்தமுடன் கொண்டைமலர் இட்டு. 5

வெற்றிமிகு மக்குறிஞ்சி வேடுவரை யாளுமொரு
கொற்றவனும் யாவனெனக் கூறிடுவாள்—குற்றமிலா
நம்பியென நாணமுடன் நன்னகரப் பைஞ்செருக்கி
வம்புமிகுஞ் சிற்றூர் மகள். 6

## நம்பியின் வேண்டுகோள்.

வெற்றிவடி வேலவனே வீரமிகும் வேடுவருக்
குற்றகுலத் தெய்வமென வோர்ந்துவரும்—பொற்புமிகும்
நம்பியெனு மன்னவனும் நாடியவன் சந்நிதியிற்
செம்பதமும் போற்றிநின்றான் சென்று. 7

வேண்டும் வரமடியர் வேண்டியபோ தீந்தருளும்
ஆண்டவன் சண்முகனை யண்டியவன்—வேண்டினான்
கண்ணைக் கவர்ந்தொளிருங் கட்டழகி யாகுமொரு
பெண்ணைப் பெறுமரிய பேறு. 8

"ஆண்மக வேழெனக்கே யன்பா யளித்தவனே
மாண்புட னீவாய் மகளொருத்தி—நோன்பொடுநான்
பூசைமிசைப் போட்டுப் புனிதனுனைப் போற்றிநின்றேன்
ஆசைமிகுந் துன்றா ளடைந்து. 9

"மண்ணிலா மன்னனும் மன்னனே மற்றிங்கே
பெண்ணிலா வீடும் பெருவீடோ—அண்ணலே
செம்மகளின் சீரனைத்துஞ் சேர்ந்தருவ மானாற்போல்
அம்மகளொன் றேழைக் கருள்.', 10

தோத்திரஞ் செய்யரசின் சோபைவலக் கண்டுடிக்கச்
சாத்திரஞ் செப்பவலர் சான்றென்றார்—காத்திருந்த
மக்களெலாங் கூடி மனமகிழ்ந்து வாழ்த்திடவும்
மிக்கவுளம் பூரித்தான் வேந்து. 11

போற்றியதுங் கானடுவே புக்கானவ் வேடர்கோன்
மாற்றுடைகள் பூண்டுவெகு மாண்புடனே—நாற்றிசையுங்
கோட்டமெழ வேடரினங் கூடிப் பறைகொட்ட
வேட்டையிடச் சென்றான் விரைந்து. 12

## வள்ளி திருவவதாரம்

பச்சைநிறம் நீத்துப் பழுத்த சிவமுனிபோ
லிச்சையுட னாங்கே யெழுந்தருளி—அச்சுதனார்
வானிருந்தோர் சீருறவும் வையகமும் வாழ்ந்திடவுந்
தானிருந்தே செய்தார் தவம். 13

செம்மாலைத் தேடித் தலத்தினிடை வந்துதித்தாள்
செம்மாதென் றோதுந் திருமகளும்—பொன்மாது
வானுருவம் மாற்றி வனத்தினிடைச் செப்பரிய
மானுருவங் கொண்டாள் மகிழ்ந்து. 14

அம்மானின் சீர்கண்டார் ஐயமுற்று வாய்திறந்து
இம்மானு மிப்புவியி லேதென்றார்—இம்மானும்
பொன்மானோ விண்மானோ பூமகளோ மற்றிதுவு
மென்மானோ வென்றே வியந்து. 15

மின்னலொளிப் பைங்கொடிபோல் வேகமெனக் கான்ம
றையும்
வன்னவுழை கண்ட வனவேடர்—சொன்னமய
வம்மா னடிக்கமண மாற்ருதே யத்திருவைச்
சும்மா விடுத்தார் துணிந்து 16

வானிருந்து வையகத்தே வந்துவிளை யாடுமொரு
மானருமை சாற்றிடத்தம் மன்னனுக்குக்—கானரினம்
ஆடியும்பண் பாடியுமங் காவலுடன் கான்கடந்து
ஓடியுமே சேர்ந்தார்தம் மூர் 17

செம்மானைக் கண்டங்கு செம்முனியுங் காதலுற
அம்மானு மாங்கே யவர்க்கிணங்கச்-செம்மாலும்
யோகநிலை நீத்துலக மோகநிலை கொண்டுவந்தார்
லோகமெலா முய்ய நினைந்து. 18

காதலுற்ற செம்மானுங் கானிற் கருத்தரித்து
மாதவருக் கோர்பெண் மகவொன்று—சோதிபோ
லீன்றதே யக்கணமே யென்றுமுல கெங்கணுமே
தோன்றவே மங்களஞ் சூழ்ந்து. 19

வண்ணமிகு மம்மகளை வள்ளிக் கிழங்கெடுத்த
மண்ணடுவே விட்டந்த மானேக-கண்ணெனவாந்
தாய்விட் டகன்றதனைத் தாளாது கூவினளே
வாய்விட் டறிமகள். 20

## வள்ளி நம்பியில்லஞ் சேர்தல்

மண்ணொன்றுங் காணு வனப்புடைய மானைக்கோக்
கண்ணொன்று காணுமெனக் கான்சேரப்-பெண்ணொன்றின்
கூக்குரலே கேட்டுக் குழவி திசைநோக்கிச்
சீக்கிரமே சென்ருன் திகைத்து. 21

கண்டான் திருமகளைக் கானகத்தே கண்குளிரக்
கொண்டான் பெருமகிழ்ச்சி கோவேந்தன் — கண்டே
மனக்கவலை நீத்தனன் மார்தட்டி மன்னன்
எனக்குநிகர் யாரென்றா னிங்கு. 22

கூடதனை விட்டகன்று கானரசு சென்றனனே
வீடதனை நோக்கியே வேகமெனத் — தேடரிய
மாட்சிமிகு மம்மகளை மார்பணைத்துத் தன்மனைக்குக்
காட்சியது தந்தான் களித்து. 23

கோரிய வோர்பொருள்கை கூடிற் றெனமகளைப்
பூரித் தெடுத்தணைத்தாள் பூங்கோதை— பாரிற்
கடவுளும் நம்பினரைக் கைவிடா னென்றே
திடவுளங் கொண்டாள் தெளிந்து. 24

கட்டி யணைத்திட்டாள் கானரசி மோகினியாள்
திட்டி கழித்திட்டாள் தீதொழிய — வெட்டியவோர்
வள்ளிக் குழியிருந்து வாழவந்த வம்மகளை
வள்ளி யெனவழைத்தான் மன். 25

கரவொலியுஞ் செய்தனரக் கானவரு மாங்கே
முரசொலியு மோங்கி முழங்கப் — பரவசமாய்க்
கன்னியருங் கும்மிபல கைகொட்டிப் பாடிடவும்
புன்னகையே பூத்துநின்றான் வேந்து. 26

வள்ளியெனும் பொன்மகளை வாழ்த்திடவே பொன்னைமிக
வள்ளியவ னீந்தா னனைவர்க்கும் — வள்ளியை
வந்தணையக் கூடிநின்ற மாதருக்கும் மந்திரஞ்சொல்
அந்தணர்க்கு மீந்தா னரசு. 27

## வள்ளி வளர்தல்

வான்மீன்க ளூடே மதிவளர்ந்து நின்றாற்போல்
மான்மகள் வள்ளி வளர்ந்தனளால் — கான்வளரும்
வேடர் குலத்தின் விளக்காய் விளங்கினளே
சூடார்க் கரிய கனி. 28

சீராட்டித் தாலாட்டிச் செம்மையாய்த் தேவியைப்
பாராட்டிப் பண்புடன் பாங்கியர் — நீராட்டிக்
கண்ணிற்கு மைதீட்டிக் கண்ணா யமுதூட்ட
வண்ணமுடன் வாழ்ந்தாள் வளர்ந்து. 29

அம்புவியி லூர்ந்துமங் கம்புயமாம் பைங்கரத்தால்
அம்புலியை வாவென் றழைத்திட்டும் — நம்பிமகள்
அஞ்சலெனச் செஞ்சரணி னம்பொற் சிலம்பொலிப்பக்
கொஞ்சுநடை யிட்டாளந் நாள். 30

ஓடித் தெருத்தலையி லுற்ற சிறுமிகள்பாற்
கூடிக் குதித்திடுவாள் கோமகளும் — நாடியிள
வெம்புலியின் மீதேறி வீரமுடன் செல்லுங்கா
லம்பிகையே வொத்தா ளணங்கு. 31

பாடற் பலபயின்றும் பாங்குடனே வேடுவச்சி
ஆடற் பலபயின்றும் ஆரணங்கு — வேடருளம்
பூரிக்க வைத்திட்டாள் பூநடுவே கைலாயச்
சீரொக்க வைத்தாளந் நாடு. 32

மான்மகளாம் வள்ளி மனமுவந்து வேகமெனக்
கான்மகளின் வித்தைபல கற்றனளாற் — கான்மிசையே
வில்லெடுத் தெய்வாள் விலங்கினமேற் புட்கள்பாற்
கல்வைத் தெறிவாள் கவண். 33

## வள்ளி தினைப்புனங் காத்தல்

மங்கையிள வள்ளிதனை மாண்புடைய மன்னவனுஞ்
செங்கதிர்நீ காத்திடவே செல்லெனவும் — மங்களமாய்
வாழ்ந்திடவே வையகமும் வானுலகுஞ் சென்றனளே
சூழ்ந்திடவே மாதர் தொடர்ந்து. 34

கறுத்த குழல்வள்ளி கானகத் தேவளர்ந்த
சிறுதத்த இடைகொண்ட சீலி - பருத்த
தினைக்கதிர் காக்கவெகு சீருடனே சென்றாள்
வினைக்கதிர் கோல விரைந்து. 35

கான்வழியே சென்றாள் கவணொன்று கைச்சுற்றி
மான்விழியாள் வள்ளி மடவன்னந் —தேன்மொழியாள்
பாடுங் குயில்நிகர்த்துப் பாங்காய்ப் பரணேறி
ஆடும் மயில்நிகர்த்தா ளாங்கு. 36

துள்ளிப் பறந்துவருந் தூக்கணமுங் கூட்டமாய்
வெள்ளிச் சிறகடிக்கும் வெண்கொக்கும் — வெள்ளமெனக்
கிள்ளைகளும் பைங்குருவிச் செங்கிளையுஞ் சூழ்ந்தனவே
வள்ளிவயல் நோக்கி வளைந்து 37

ஆலோல மாலோல மாலோல மென்றிசைத்து
மாலோன் மகள்வள்ளி ஓலமிட்டாள் — வேலோனைக்
கானி லழைத்தனளோ கன்னி கழித்திடவே
ஊனை யுருக்கினளோ வோர்ந்து? 38

ஆலோல மென்சொல்லி லங்கமெலா மின்பமுறக்
கோலா கலக்குருவிக் கூட்டமதும் — மாலாகி
வள்ளி வயல்நோக்கி வந்து குழுமினவே
கள்ளுண் பவர்போற் கலந்து. 39

மெல்லிடையாள் வள்ளிமகள் மென்மொழியில் மெய்ம்
மறந்து
தொல்லைவழி சுற்றிவந்த புள்ளினங்கள் — கொல்லைதனில்
துக்கமெலாந் தீர்ந்தனபோற் றூங்கினவே யாங்கவையுஞ்
சொர்க்கமெலாஞ் சொல்லிசையிற் கண்டு. 40

சோவென்று வள்ளிகவண் சுற்றித் துரத்திடவுங்
கோவென்று புள்ளினங்கள் கூட்டமாய்க் — கூவியங்கு
செல்வனபோற் சென்று சிறகடித்து மீண்டனவே
பல்வளஞ்சேர் வள்ளிவயற் பார்த்து. 41

வான்வெளியிற் புள்ளினங்கள் வந்தபெருங் கூட்டமதைக்
கான்வளரும் வள்ளிமகள் கண்ணுற்றுச் – சாண்வயிறு
காக்கவந்த புள்ளினமேற் கல்லெறியச் சிந்தைகொண்டு
நோக்கிநின்றாள் நோவ நுதல். 42

புள்ளிமயி லென்றெண்ணிப் புட்கள் பயமின்றி
வள்ளிமயில் நோக்கி மதித்துவரக் — கள்ளமிலாள்
ஏனற் பயிர்தெளித் திங்கிருந்து போமினென்றாள்
வானிற் பறந்து மகிழ்ந்து. 43

வானிருந்த புள்ளினங்கள் வந்தே கதிர்கோலக்
கானிருந்த வள்ளி கவணெறிந்தாள் — வானிருந்து
செங்குருவி யொன்று சிறகொடிந்து வீழ்ந்திடவும்
நங்கைமுரு காவென்றாள் நைந்து. 44

முருகா வெனமொழிய முன்போற் பறந்த
திருகால் மடித்தவ் விளம்புள் – ஒருகால்
வேல்முருகா வென்றிடவும் மீண்டுமுயிர் வந்ததென
மால்மருகன் தாள்தொழுதாள் மாது. 45

சண்முகத்தான் நாமமே சஞ்சீவி யென்றெண்ணி
உண்முகத்தே வைத்து வுருவேற்றித் — தண்முகத்தாள்
அன்பின் பெருக்கில் அனைத்தும் மறந்துநின்றாள்
முன்பின் னறியாதாள் போல். 46

## நாரதர் வரவு

வாழியென மங்கலச் சொல் வானிருந்து வந்தாற்போல்
யாழினிசை யாங்கொன் றெழுந்திடவுங் – கீழுலகில்
இத்தொனியைக் கேட்டிலோ மென்றனரே வள்ளியுடன்
அத்தனை தோழியரு மன்று. 47

பண்ணிறைந்த யாழொன்று பாங்குடனே கைப்பிடித்து
விண்ணிருந்து வந்தாரோர் வேதியர் – மண்ணிருந்த
மான்மகளாம் வள்ளியுமே மற்றவர்போல் ஐயமுற்றாள்
வான்மகள்தா னுவாள் மறந்து 48

வானவழி வந்திறங்கி மாமுனிவர் வாயாரக்
கானமது செய்து களிப்புற்றார் – வானோர்
சிறைமீட்ட வேலவனைச் சீராகத் தேவர்
குறைதீர்த்த கோவைக் குறித்து. 49

சிந்தைக் கினிய திருப்புகழாற் சண்முகனைச்
சந்தத் தொடுபாடிச் சாதுவாம் — அந்தணருங்
கள்ளமிலா வள்ளிதனைக் கந்தருவ கானத்து
வெள்ளமதில் வீழ்த்தினா ரன்று. 50

மின்னலொளி மேனிகொளும் மேனாட்டி னின்புடையார்
கன்னியரிற் கண்மணியைக் கண்ணுற்றுப்—புன்னகையாய்
மாதினெதிர் வந்திடவும் வள்ளிமகள் மாதவரின்
பாதமதில் வீழ்ந்தாள் பணிந்து. 51

வுள்ளியடி வீழ்ந்ததனை வான்வந்த வேதியரும்
எள்ளளவு மாற்றூரா யேக்கமுற்றுத் — தெள்ளியர்தம்
ஊனு முதறலிட வுள்ளமுழு தும்பதறத்
தானும் பணிந்தார் தணிந்து. 52

விந்தையிது வேதியரே வேடர்மக ளாமெனக்கே
அந்தணராம் நீர்பணித லாகுமோ — கந்தனே
இந்தவுப சாரமெனை யெள்ளளவும் பற்றாதே
வந்தருளு வாயென்றாள் மாது. 53

"கந்தனுனைக் காத்தருள்வான் கன்னியுனக் கேன்கவலை
சொந்தமுட னுன்னைத் துணைகொள்வான் — வந்தவினை
தீர்ந்தவுடன் செஞ்சரணஞ் சேர்த்திடுவான் செவ்வேளும்
நேர்ந்ததற்கு வாடாது நில். 54

"பக்தாடி வீழ்ந்து பணிந்திடுதற் பாகவத
வுத்தமர்க்குச் சீரா முணர்ந்திடுவாய் — சுத்தவுளக்
கோமகளே கொள்வாய் குணமிதுவாய்ப் பேணாரோ
பூமகளே வந்தாற் புவி?" 55

என்றுரைத்து வேதியரு மேந்திழையாள் வள்ளியுளத்
தின்புறுத்துஞ் சொல்லா விதஞ்செய்து — அன்புறவே
சீக்கிரமே செல்விக்குச் செம்மணமும் வாய்க்குமென
வாக்குறுதி யீந்தார் மகிழ்ந்து. 56

பாரதனிற் கேட்டறியாப் பாடற் படித்திடும் நீர்
யாரெனவே வேண்டிடவு மேந்திழையாள் — சீரியரும்
ஊரெதுவு மின்றி யுலகமெலாஞ் சுற்றிவரும்
நாரதர்நா னென்றார் நகைத்து. 57

“மங்களமே யோங்கிடநன் மானிடர்க்கும் வானவர்க்கும்
எங்கணுமே சுற்றிடுத லென்பணியே — மங்களையே
பண்ணுளும் யாழ்கொண்டு பாடிப் பரம்பொருளை
எந்நாளுங் கொண்டிடுவே னின்பு. 58

“காரணமே கொண்டு கலகம் புரிந்திடுவார்
நாரதரே யென்றறிவார் ஞானியரும் — பாரிற்
கொடியவரை வாட்டிக் குணமதனை நாட்டி
அடியவரை வாழவைப்பே னுங்கு. 59

“அன்பர்தமை ஆண்டவர்பா லாக்கிடலும் ஆண்டவனை
அன்பர்தமக் கானவரா யாக்கிடலும் — அன்பர்தமை
இப்புவியில் மேம்படவே வைத்திடலு மென்பணியென்
றொப்பிலிநீ கொள்வா யுணர்ந்து.” 60

புன்னகையே பூத்திட்டுப் பூங்கொடியாள் பூக்கொண்டு
அன்னவரை யாங்கே யருச்சித்து — இன்னமுதத்
தேனுந் தினைமாவுந் தீங்கனியுஞ் சேர்த்தளித்து
வானோர் பசிதீர்த்தாள் மாது. 61

“நாரதரும் உண்டபினம் நங்கைக், கிதமுரைத்தார்
பாரதனி லீடிலாப் பாவையே — கோருவேன்
உன்றனக்கே நாயகனா யொப்பற்ற சண்முகனை
என்றனக்கே பார மிது. 62

நன்மணமே நான்முடிப்பேன் நங்கைகுற வள்ளிக்குச்
சண்முகனே மாலையிடச் சாதிப்பேன் — பெண்மணியே
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுமொரு
கள்ளமொழி யல்லவிது காண். 63

வள்ளிமிக நாணமுற்று மாதவரை நோக்கியே
எள்ளளவுங் கல்லாத வேழைக்கு – விள்ளுமென்றாள்
"வேலவரு மிவ்வுலகில் வேடுவச்சி நாடுவரோ
மாலையிடு வாரோ மதித்து? 64

"நன்றுமது கூற்றும் நகைப்புக் கிடமன்றோ
குன்றுதோ ருடுங் குமரனும் – மன்றுளா
டீசனருள் சேயு மெயினர் குலமகளை
நேசமுங்கொள் வானோ நிலத்து 65

"காதற் குறத்தி கருத்திற் கிசைவாரோ
வேதப் பொருளாகும் வேலவரும் – மாதவரே
கிட்டுமோ மெய்ப்பொருடான் கீழ்மகளா மென்றனக்கே
எட்டுமோ யீசனரு ளிங்கு?'; 66

நாரதர்.

"வேந்தனும் வேடுவனும் வேலவருக் கொன்றேகாண்
கூர்ந்துமே நோக்கிற் குலமிரண்டே – வந்திழையே
அன்ப ருயர்ந்தோ ரலாதா ரிழிகுலத்தோர்
அன்பே யவனென் றறி. 67

"மன்னனும் மாசற்ற தொண்டனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் றொண்டனே மாண்புடையான் – மன்னற்கு
மண்ணிலததே யுண்டுபுகழ் மற்றுண்டு தொண்டற்கு
மண்ணிலத்தும் விண்ணிலத்தும் மாண்பு. 68

## அறுமுகன் பெருமை

"வேல்முருகன் மேன்மைதனை விண்டுரைப்பேன் கேள்
மகளே
மால்மருக னய்வந்த மாண்புடையான் – நான்மறைகள்
செப்பரிதாஞ் சீலமுளான் செப்பினு னீசனுக்கும்
ஒப்பரிதா வோமினுரை யன்று. 69

"அடியார்க்குச் சேவகனாய் ஆருயிரா யென்றுங்
குடியாகி யவருள்ளக் கோவாய் – மிடியோட்டி
எட்டுவிதச் செல்வங்க ளீந்தவரைப் பாரின்மிசைச்
சிட்டனெனச் செய்தளிப்பான் சீர். 70

"குருமுகத்தான் போற்றுங் குருவாகி நின்றான்
திருமுகத்தாள் தேவிதருஞ் செல்வன் – கரிமுகத்தான்
பின்வந்த சண்முகத்தான் பேணும் அடியாரை
முன்வந்து காப்பான் முனைந்து. 71

"அன்பர்தமை யாட்கொண்டே யாங்கவருக் காளாகி
இன்பமிகுஞ் செம்பதமே யீந்தருள்வான் — என்புருகிப்
பாடிப் பரவசமாம் பக்தருளக் கற்பகமாய்க்
கூடிக் களிப்பான் குகன். 72

"பங்கயனைக் குட்டிப் படைப்பதனைத் தானெடுத்தான்
சங்கரனும் பேணத் தகைமிகுத்தான் – தங்கியொரு
பச்சைமயில் மீதேறிப் பாரெலாஞ் சுற்றிவந்தான்
அச்சமுற வண்டமெலா மன்று. 73

"அஞ்சுமுகத் தான்நுதலி லாறுசுட ராய்ப்பிறந்து
செஞ்சரவ ணத்திலறு சேய்களாய்க் — கொஞ்சவுமை
மால்கொண்டு கார்த்திகையர் பாலுண்டு தாய்கொடுத்த
வேல்கொண்டு சூர்துணித்தான் வேள். 74

## சிவன் பெருமை

"சண்முகனின் றாதை சரித்திரமுங் கேள்மாதே
விண்ணவரின் கோமான் விடையேறி – எண்குணத்தான்
நம்புமடி யார்க்கெளியன் நாரணனும் நான்முகனும்
அன்புசெய் தேத்தும் அரன். 75

"கரியுரித் தோ லுடையான் காபாலி யானுன்
அரியயன் காணுத வண்ணல் – அரியவொரு
புன்னகையே பூத்துப் புரமூன் றும் நீறுகண்டான்
என்னே யிவன்பெருமை யிங்கு. 76

அம்பலத் தாடினு னன் றுநட ராசனுய்
உம்பர்கள் கூடி யுவந்தேத்த –அன்பால்
உலகெலா மீன்றவுமைக் கொக்கநட மாடி
நலமெலா மீந்தானந் நாள். 77

"ஆலமுண்டு வானவரை ஆண்டருளி யண்ணலன் று
நீலகண்ட ணுகி நெறிகண்டான் – கோலமுடண்
சென் று மலைமகளைச் சீராய் மணந்தனனக்
கொன்றை மலாணிந்த கோ. 78

"கங்கை முடிவைத்தான் காதல் மிகுத்துத்தன்
பங்கி லுமைவைத்தான் பாம்பணிந்தான் – செங்கண்ணுல்
மாரனைச் சுட்டன்று மாதேவன் விட்டனன்
சூரனைக் கொல்லுஞ் சுடர்..' 79

## தேவியின் மகிமை

"அன்னையுமை மாண்பதனை யாருரைக்க வல்லாரே
பொன்னையுமே எளனஞ்செய் பூவடிவாள் – முன்னமொரு
காளியென வாடினுள் கண்டுசிவ னஞ்சிடவுந்
தாளியெழ வண்டமெலா மங்கு. 80

"மின்னற் கொடியிடையாள் மீன்விழியாள் சீர்மிகுத்த
வன்னப் பதமுடையாள் வாணுதலாள்–பொன் னுடையாள்
அன்ன நடையுடையாள் ஆடு மயில்நிகர்த்தாள் 81
தன்னை நிகரிலாத் தாய்.

"வாசவனின் வச்சிரமும் மாதேவன் சூலமதும்
கேசவனின் சக்கிரமுங் கேவலமாய் – மாசூரன்
கொல்லவிய லாநாளிற் கொன்றவனைத் தன் குகனை
வெல்லவெனத் தந்திட்டாள் வேல். 82

"ஆக்க லளித்த லழித்த லருட்கண்ணால்
நோக்கல் மறைத்தலிவை நோன்பதுவாய் – வாக்கிலா
மூசனுக்கும் வாக்கருளு மூலமாங் காமாட்சி
யோகநிலை கொண்டா ளுவந்து. 83

"பாரதனில் மாலோனின் பத்துவிதத் தோற்றமுஞ்
சீருடனே தேவி திருவிரலின் – கூராம்
உகிரின்கண் தோன்றினவா லொப்பிலாள் சீரைப்
பகர்வதுமிங் காமோ பரந்து. 84

"பூமகளும் நாமகளும் போற்றிசெயுஞ் சீர்கொண்ட
கோமளையின் போருடான் கொண்டோர்க்குப் –பூமிதனில்
வானவரும் வந்தனைசெய் மாண்புடனே மற்றெல்லா
ஞானமுடன் கூடும் நலம். 85

அடியார்க்குத் தாயுமாய் ஆருயிராய் என்றுங்
குடியா யவருள்ளங் கொண்டே — படிமீது
தாய்போல வன்பர்குறை தன்குறையா யெண்ணியுமை
சேய்போலக் காத்திடுவாள் சேர்த்து. 86

என்றுமே காணாத பெட்டுவிதச் செல்வங்கள்
நன்றே நயந்திடுவாள் நம்பினோர்க் – கென்றுங்
கருணைவிழிக் கற்பகமா யன்பரிடம் நின்றே
தருணமதிற் காத்திடுவாள் தாய். 87

## திருமால் பெருமை

"மாமனெனுஞ் செம்மாவின் மாண்புரைக்க வாகாதே
நாம மொழிந்தார் நாகணுகார் — சேமமாய்
மண்ணுலகில் மன்னராய் மாசற்று வாழ்வரே
விண்ணுலகிற் றேவருமாய் மேல். 88

"விண்டுவின் மேன்மைசற்று விள்ளுவா மென்னிலோ
வண்டுமூரல் மாலையணி மார்பினன் — தொண்டுசெய்
தன்பருக் காருயிராய் வாழ்க்கைப் பெருந்துணையாய்
முன்பிருத்திக் காப்பான் முனைந்து. 89

"மச்சமாய்க் கூர்மமாய் வாராக மாய்ப்பாரில்
அச்சுதன் மானிட சிம்மமாய்ப் — பிச்சைகொள்
வாமனனாய்க் கோடாரியி ராமனாய்ப் பட்டாபி
ராமனாய்க் கண்ணனா னான். 90

"சங்கமுடன் சக்கரமுந் தாங்கிடுவான் செங்கமல
மங்கைதனை மார்பணியு மாமாயன் — எங்குநிறைக்
கண்ணனென வாயர்க்குக் காட்சிதந் துள்ளமாம்
வெண்ணையதைக் கொள்ளைகொண்டான் வேட்டு. 91

"கார்முகில் வண்ணனே கண்ணனென வந்துதித்துப்
பார்மகிழ லீலை பலவாடி — ஓர்தருணம்
எத்தினால் ஆயர்க ளில்லில் அளைதிருடி
மத்தினால் மோதுண்டான் மால், 92

"பார்த்தனுக் கன்று பரியோட்டுஞ் சாரதியாய்ப்
போர்த்தலத்து ஞானம் புகட்டிநின்றான் — காத்திடுமென்
றோலமிட்ட மாதினையு மோடிவந் தாட்கொண்டான்
சேலைமிக நீளவே செய்து. 93

"விரித்திடுவே னுன்பெருமை வேலவனி னுள்ளங்
கரைத்திடுவே னுன்பாற் கனிய — உரைத்திடுவேன்
தன்னையே தானிகர்த்த சண்முகனுக் கீடாய
வுன்னையே தான்மணக்கும் ஊழ்." 94

வள்ளி—:

"சண்முகனின் சீர்மிகநீர் சாற்றிடவுஞ் சாற்றிடவும்
என்மனதின் ஐயமும் ஏறுதய்யே — கன்முனியே
எத்துணைநீர் செப்பிடினு மென்னையுமோ ஏற்பனிங்கு
இத்துணையா மாண்ப னிறை?" 95

நாரதர்:—

"ஐயமுறல் வேண்டா மறைக்கணுழும் ஆரணங்கே
மெய்யுணைக் கைப்பிடித்தல் வேலவனும் — செய்ய
திருப்பாற் கடல்வந்த சீதேவி பெற்ற
திருப்பாவை நீயெனவே தேறு." 96

வள்ளி:—

மாமுனிசொற் கேட்டு மறுமொழிதான் கூறினாள்
கோமளாம் வள்ளி "குணமுடையீர் நாரதனே
அன்னையெனச் செப்பினீர் ஆய்ந்தோ இனியன்றோ
என்னமொழி யாமிங் கிது? 97

"தந்தையம் மாலன்றோ தாய்செம் மகளானல்
விந்தையிது வாகுதே வேதியரே — எந்தை
நலமுடைய நம்பியன்றோ நாரதரே கூறுங்
குலமதனிற் கீழன்றோ நான்? 98

"வான்மகளே யென்றுரைத்தீர் வையகத்துக் கான்மகளைத்
தேன்மொழியே செப்பவலத் தேவரீர் — கானிடையே
செங்கதிரைக் காக்குஞ் சிறுமிதனைத் தேவியென்றீர்
இங்கிதமாஞ் சொல்லோ விது?" 99

நாரதர்

"முக்காலு முற்றுணர்ந்த மாமுனிநா னென்றறிவாய்
எக்காலு மெங்கு மிருந்திடுவேன் — அக்கால்நீ
வானிலே சுந்தர வல்லியா யிப்புவியிற்
கானிலே வந்துதித்தாய் காண். 100

"உன்பிறப்பின் மாண்பதனை யுத்தமியே கேளுரைப்பேன்
முன்பிறப்பிற் சண்முகனை மோகித்தாய் — இன்புறவே
செம்மானு மிக்கானிற் செம்மகளைச் சேர்ந்திடவும்
அம்மானு மீன்றா ளுனை. 101

மானெழிலே காணவந்த மாண்புடைய நம்பியுங்
கானடுவே வந்துன்னைக் கண்டெடுத்துத் — தான் மகிழ்ந்து
இல்லாளுக் கீந்திடவு மேந்திழையாள் சீராட்ட
வில்லாளர்க் கானாய் விளக்கு. 102

"சக்தியருள் சண்முகனைச் சார்ந்துமணஞ் செய்திடுவாய்
இத்தரணி வாழ்த்தியுனை யேத்திடவே — உத்தமியுன்
நன்மணக் கோலமதை நான்கண்டு சேவிக்க
என்கண்கள் போதுமோ யிங்கு?" 103

**வள்ளி:-**

"நன்றே யுரைத்ததுநீர் நாரதரே நன்குணர்ந்தேன்
இன்றே யறிந்திட்டே னென்னையான் – என்றும்
மணிதனையான் கைப்பற்றேன் மாண்புடையகந்தப்
புனிதனையே யான்மணப்பேன் போய்." 104

மெத்தவும் மாமுனிவர் மெய்மொழியால் மெய்ய
றிந்து
புத்துயிரும் பெற்றனளப் பூங்கோதை – பக்திமிகத்
தான்வந்த வாறுரைத்தார் தாட்கமலம் வீழ்ந்தெழுந்தாள்
மான்தந்த வள்ளியெனு மாது. 105

## நாரதர் சண்முகன் சந்நிதி சார்தல்

நாரதரும் நங்கையிடம் நல்விடைபெற் றக்கணமே
பாரதனை விட்டுப் பாமன்பாற் – சீருடனே
யாழினிசை யாங்கெழுப்பி ஆகாய வீதியிற்போய்
வாழிபொழிந் தேமறைந்தார் வான். 106

சண்முகமா யென்றனையாள் தண்ணருளே யென்றி
சைத்து
உண்முகமாய் வேலவனை யுன்னியன்று – விண்முகமாய்ப்
பெண்மணியாம் வள்ளிமகட் போழகைச் செப்பிடவே
சண்முகசந் நிதிசார்ந்தார் சாது. 107

புன்முறுவற் பூத்துப் புனித னறுமுகத்தான்
இன்முகமாய் நாரதரை யேற்றங்கு – தன்மையுடன்
மாசில் மனத்தினராய் மங்களஞ்செய் மாமுனிக்கு
ஆசியது சொன்னார் அழைத்து. 108

வேலவரின் செஞ்சரணம் வீழ்ந்திட்டு மாமுனிவர்
சாலத் திருப்புகழ்கள் சாற்றிடவும் – வேலவரும்
பாரதனின் செய்தி பகர்ந்திடுவீ ரென்றுரைத்தார்
நாரதரை நோக்கி நயந்து. 100

நாரதர்:–

"வானென்றுங் காணா வனப்புடைய மாசற்ற
மானென்று கண்டேன்நான் மாநிலத்துக் – கானென்றில்

என்னைத்தான் கண்டதுமே ஏங்கியதென் னய்யனே
தன்னைத்தான் காணத் தவித்து. 110

"வேடர்மிகுங் கானடுவில் வெவ்வினையாற் கட்டுண்டு
வீடுபுகும் வேட்கை மிகக்கொண்டு – வாடிமிகப்
பெண்மணியா மம்மான் பெரும்பாணின் றேங்கியதே
உண்மணியைத் தேட வுயர்ந்து. 111

"ஏனல்வளர் பைம்புனத்தி லீனரிடஞ் சிக்கியவோர்
மானும்வளர் காதை மகிழ்ந்தோத – யானுவந்து
உம்மையடைந் தேனதுவு முய்யும்வகை யீந்தருளிச்
செம்மையொடு காண்பீர் செயம்." 112

அறுமுகன்:–

"விலங்கான மானுக்கு வேதியரே நீருங்
கலங்கியது கண்டு களித்தோம் – நிலங்களில்
எங்குமே கண்டிலோ மிக்கருணை" யென்றனன்
தங்கவேல் கொண்டான் நகைத்து. 113

நாரதர்:–

மானன்று மன்னவரே மான்போன்ற பெண்ணன்றே
கானன்று யான்கண்ட கன்னிகையே – நானென்று
மார்காணுங் காமனுமே மங்குவனே மங்கையவள்
சீர்காண வுள்ளஞ் சிதைந்து. 114

"சாற்றறியாச் சீலத்தாள் தன்னிநிக ரில்லாதாள்
மாற்றறியாப் பொன்னே வடிவானுள் – போற்றிடவே
ஆயிரமா நாவுடைய ஆதிசேட னானும்
வாயிலையே யென்பான் மதித்து. 115

"ஒப்பிடிலோ கூர்விழிக ளும்முடைய வேலொக்குஞ்
செப்பில் மயிலொக்குஞ் சீர்வடிவஞ் – செப்பரிய
பெண்மணியின் சீரொக்கும் பேரழகன் பீடுடைய
சண்முகனுந் தெய்வமணி தான். 116

"ஒள்ளியவோர் மேனிகொளு முத்தமியாம் மர்தினையும்
வள்ளியென வோதுவரே மாநிலத்து-விள்ளவொணு
மங்கைதனைக் கைப்பற்றும் மாண்புடையான் அந்தமுடன்
தங்கவேல் கைப்பிடித்தான் தான்." 117

அறுமுகன்

"முன்னமொரு மானென்றீர் முற்றுமதை மாற்றியே
பின்னமொரு பெண்ணென்று பேசினீர் – என்னையும்
மங்கைதனுக் கேற்ற மணாளனே யென்றுரைத்தீர்
இங்குமக்குப் பித்தமுற்ற தேன்?" 118

நாரதர்:–

"பித்தமொழி யல்லவிது பெம்மானே யான்மொழிதல்
நித்தமொழி யாகும் நிமலரோ – பக்தியுடன்
தாட்பணியுந் தண்ணடியார் தாபந் தவிர்த்தவரை
ஆட்கொள லும் பாரமன்றே ஆங்கு? 119

"நாட்கொண்டு தன்னடியார் சஞ்சலங்கள் தீர்த்தவனை
யாட்கொண்டு வீடுதரும் அண்ணலே — பூக்கொண்டு
நித்தமும் செஞ்சரண் நெஞ்சுருகிப் போற்றிசெயும்
பத்திமிகும் பாவையவள் காண்- 120

"சேவடியே செல்வமெனத் தேடிநிதம் பேணுமொரு
பாவையுமை நாடிப் பரகதிநீ — தாவெனவே
கூவிடுங் காற்கருணை கொண்டுநீர் காப்பீரோ
கைவிடு வீரோ கசந்து? 121

"உலகெலாம் நாயகனு மொப்பற்ற வும்மை
நலமெலாங் கூடியவோர் நங்கை — பலமுறையுந்
தஞ்சமெனத் தண்சரணே சாலத் தொழுதிடுங்கால்
நெஞ்ச முருகீரோ நீர்? 122

"கதியென்று நாடிவருங் கன்னிதனைக் காத்தல்
விதியன்றோ வேலோய் விளம்பும் — பதியென்று
செங்கரமே பற்றிச் சிறுமிதனைச் சேர்ந்துநீர்
மங்களமே காண்பீர் மணந்து.' 123

அறுமுகன்:—

"நன்றே நவின்றிட்டீர் நாரதரே நன்குணர்ந்தோம்
இன்றேயெம் வள்ளி யிடந்தேடிச் — சென்றே
சிறுலீலை செய்திட்டுச் சீராயம் மாதை
நறுமணஞ் செய்திடுவோம் நாம்." 124

## அறுமுகன் வள்ளிபுனஞ் சார்தல்

கந்தகிரி விட்டெழுந்து காசினியிற் கந்தவேள்
அந்தமுடன் தென்றணிகை வந்தமர்ந்தார் — அந்தநாள்
தான் கொடுத்த வாக்கதனைச் சற்றும் மறவாது
மான் கொடுத்த மான்மணக்கு மாறு. 125

செந்தணிகை விட்டகன்று சிற்றூர்க் கெழுந்தருளச்
சிந்தையது கூர்ந்தன்று செவ்வேளும் — அந்தமிகுங்
காடர்நடு வாழுமொரு கன்னிகையைக் காதலுற
வேடனுருக் கொண்டான் விரைந்து. 126

வண்டார் கருங்குழலாள் வள்ளி புனஞ்சேர்ந்தான்
கண்டார் மனங்கவருங் கட்டழகன் — திண்டோளில்
வில்லொன்று வைத்துத்தன் மீசை முறுக்கிநின்றான்
சில்லென்று சீர்நடையு மிட்டு. 127

கண்குளிரக் கண்டனனே கானகத்துக் கண்மணியாம்
பெண்குலத்தி ராணியெனும் பெண்மணியை — விண்
குறவன்
புன்னகையே பூத்துளமும் பூரித்து நின்றனனே
என்னே யிவள்வண்ண மென்று. 128

## வள்ளியும் வேடுவனும்

அழகினையு மாங்கே யளந்திடுவான் போன்று
முழுவடிவும் நோக்கிநின்றான் மோகித் — தழகெயினன்
வெம்பசியால் வாடினேன் வேண்டுமுண வுண்டுமிகத்
தெம்புடனே பார்த்திட்ட வாறு. 129

மங்கையர்தங் கண்கவரு மார்பினனைக் கண்டதுமே
நங்கைகுற வள்ளிமிக நாணமுற்றுச் — சங்கைமிகக்
கண்கள் தலம்நோக்கிக் கற்சிலைபோல் நின்றனளே
பெண்கள் திலகமாம் பெண். 130

என்னம்பு பட்டிங் கெழிலுடைய மானொன்று
முன்வந்த துண்டோ மொழிவாயே — என்றன்
குறிதவறிப் போதற் குவலயத்தே தென்றான்
நெறிகவரு மாதுமுன் நின்று. 131

பற்றேது மில்லாத பாவைபோல் வாலிபனைச்
சற்றேதான் நோக்கித் தலைநிமிர்ந்து - குற்றமிலாள்
உன்னம்பு பட்டிங் குழையொன்றும் வந்ததில்லை
என்முன்ன மென்று ளெதிர்த்து. 132

வேடுவன்:-

"வந்தமா னந்தம் வகுத்திடுவேன் கேள்மாதே
அந்தமா னாரினுஞ் சீருளமான் - விந்தையாய்க்
கொம்பிரண்டும் மெல்லிடையும் கூர்விழியு மேலேயென்
அன்படியுங் கொண்ட தது. 133
"அன்ன மெனுநடையு மாடு மயிலழகுஞ்
சொன்ன மெனுமுடலுந் தூய்மையுந் - தன்னை
ஒருகாலே நோக்கி லுளங்கவருஞ் சீரும்
இருகாலு முள்ளமா னிங்கு. 134
"இக்கானில் வாழெயினர் எள்ளளவுங் காணாது
எக்காலு மென்னுறவே யிச்சித்தும் - இக்கானிற்
கன்னி கழியக் கவணென்று கைச்சுற்றி
என்னையெதிர் நோக்கிநின்ற திங்கு." 135

வள்ளி:-

"முன்னமொரு மானென்றீர் முற்றுமதை மாற்றியே
பின்னமொரு சீருள்ள பெண்ணென்றீர் - சொன்னது நீர்
பித்துமொழி யோவன்றேற் பெண்ணணையும் வஞ்சிக்கு
மெத்துமொழி யோசொல்வீ ரிங்கு." 136

வேடுவன்:-

"பித்த னெனினுநீ பித்தனருள் சேயெனினும்
எத்த னெனினுமிங் கென்றைக்கும் - முத்தையே
முத்தெனினும் மான்மகளே முத்திக்கு வாய்த்தவொரு
வித்தெனினும் என்னும் விளம்பு? 137

"கண்டதுமே காதற் கனலெழுப்பும் கன்னியுன்றன்
தொண்டதுமே செய்யத் துணிந்தேன்நான்—விண்டிடிலோ
உன்னுடைமை நானானேன் ஒப்பிலிநீ யெந்நாளும்
என்னுடைமை யாவா யிசைந்து. 138

"அடிமைநா னாகுவனென் னாரமுதே யென்னைக்
கடிமணமே கொண்டு களிப்பாய் — கொடியிடையாய்
நீவேறு நான்வேறென் றெண்ணாதே நீயுறைவாய்
பூவில் மணமுறைந்தாற் போல்" 139

வள்ளி:—

"கன்னியென் கற்பழிக்கக் காத்துநின்ற கள்வனே
என்னமொழி கூறிநின்றா யென்முனமே — உன்னையுமே
கொன்றிடுவார் குன்றவரின் கூட்டத்தார் சீக்கிரமே
சென்றிடுவா யுன்னூர் தெரிந்து. 140

"பொன்னொடு போகங்கள் பூமிதனில் வேண்டிடுவோர்
உன்னொடு கூடி யுளமகிழ்வார் — என்னையும்
மரனிடனும் வேட்டு மணம்புரித லாகாதே
கானிடை வாழ்பவனே காண். 141

"உன்னுயிரை வேண்டிடில்நீ யோடி யுடனகல்வாய்
என்னுறவா ரிங்குவரி னேசிடுவர் — பொன்னேனற்
காத்திடு மென்பணியைக் கைக்கொள்வேன் வேடுவனே
ஆத்திர மாமுன் அகல்." 142

அறுமுகன்:—

"வைதாரை வாழவைப்பேன் வையகத்துச் சொல்லம்பால்
எய்தாரை என்று மிகழ்ந்திடேன் — கைதான்
கொடுத்தெனையு மேற்றிக் குணமாய்ப் பரண்மே
லடுத்துனையுஞ் சேர வருள். 143

"காமத்தீக் காளானேன் காரிகைநீ கூடியிச்
சாமத்தென் தாபந் தணித்தருள்வாய் — ஓமத்தீ
மூட்டி மணநூல் முடிந்திடுவேன் நின்கழுத்தில்
ஊட்டியுனக் கின்ப முணர்ந்து. 144

"கட்டி யணைத்துனது காதற் கனியுண்பேன்
எட்டிப் பிடித்துன்னை யின்புறுவேன் — கிட்டி
நலியுமென் நெஞ்சிற்கு நன்மையுமீ யாக்கால்
வலிய வடைவேன் மதி." 145

## வேடன் வேங்கை மரமாதல்

என்றுரைத்து வேடுவனு மீடிலா வள்ளிதனைச்
சென்றணைய மேற்பாணிற் செல்லுங்காற் — குன்றவர்
கோன்
அங்கே வருவதுகண் டக்கணமே மாறியுரு
வேங்கை மரமானன் வேள். 146

ஓங்கி வளர்ந்தங் கொருபொழுது மில்லாத
வேங்கை மரங்கண்ட வேந்தனுமே — ஆங்குப்
பாணின்ற கோமகளைப் பார்த்துமே கேட்டான்
மரமங்கு வந்த வகை. 147

இந்தமரம் வந்தவகை எள்ளளவும் யானறியேன்
எந்தையே விந்தையிது வென்றுரைத்தாள் — அந்தப்
பெருவிளை யாட்டுடையான் பீடுடைய கந்தன்
திரு விளையாட்டென்றய்ய முற்று. 148

மாயமா மங்குவந்த வாறதனை மன்னவனுந்
தூயமனங் கொண்டங்கு சோதித்து — நேயமுளான்
திண்ணமாய் வேலன் திருவருளே யென்னுமொரு
எண்ணமே பூண்டா னிறை. 149

வேங்கைமரம் வீழ்த்திடவே வேடுவர்கள் வேகமென
ஓங்கிய வாட்கொண்டே ஓடிவர — ஆங்கவரைத்
தூய்மையா மித்தருவைத் தொட்டிடவுஞ் செய்யாதீர்
மாமயிலோன் லீலையென்றான் மன். 150

ஏந்தமக்கு நீழலரு ளித்தருவை யென்னருமைத்
தந்தையே வீழ்த்தற் றகாதுகொல் — அந்தமுடன்
இம்மாமு மிங்கிருந்தா லென்மனமும் வாடாதே
நிம்மதியா மென்றாள் மகள். 151

நிம்மதியுந் தந்துனக்கு நீழலுமே யீந்தருளு
மிம்மாமு மிங்கே யிருக்கட்டும் — என்மகளே
ஈங்கா தினிதிருப்பாய் என்றுரைத்தான் நம்பியங்கு
பாங்கான தன்மகளைப் பார்த்து. 152

ஆங்கரச னீந்த வறுசுவை யுண்டிதனை
வேங்கைமா நீழலில் விற்றிருந்து — பூங்குழலாள்
சேர்ந்தழைத்துச சேடியரோ டுண்டு மனமகிழ்ந்தாள்
வேந்துமிருந் துண்டான் விருந்து. 153

## வேங்கைமரம் குமரனாதல்

நங்கைகுற வள்ளிமகள் நல்விடைபெற் றேகமன்னன்
அங்குமா மாய்நின்ற ஆண்டவனும்—மங்கைமிகக்
கூச்சமது கொள்ளக் குமா வடிவெடுத்தான்
ஆச்சரிய முங்கொள்ள வன்று. 154

காமனுமே நாணுமொரு கட்டழகன் காரிகையைத்
தாமதமே யின்றித் தரிசித்துக் — காமுகனுக்
கன்னிதனை நோக்கிக் கரம்பிசைந்து நின்றனனே
என்னைமணஞ் செய்திடுவா யென்று. 155

அழகுருவ மாய்நின்ற வாண்மகனைக் காண
உமைமகளி னுள்ள முருகி – நழுவியதே
தன்னிலேயே விட்டுத் தடுமாற்ற முற்றங்கு
எங்கிலேயே கொள்வதினி யென்று. 156

வெறுக்கவுமிங் காகுமோ யிவ்வழகி னானை
மறுக்கவுமிங் காமோ மணக்கத் – குறத்திக்கு
என்றுளமு மேங்கிநின்றா ளேந்திழையாள் வள்ளிமான்
ஒன்றுமறி யாதவளே யொத்து. 157

நாயகனை நாடுமொரு நற்பருவ நங்கையுமண்
மாயைதனி லுற்று மயங்கிடுங்கால் – தூயன்
தடுத்தாளுஞ் சண்முகனைத் தன்னகத்தி லன்பாய்
அடுத்தாளக் கண்டா ளணங்கு. 158

சண்முகனைக் கண்டவுடன் தன்னகத்தி லக்கணமே
திண்மைமிகக் கொண்டே தெளிந்துமனம் – வண்மகனே
உன்னைமணஞ் செய்திடவு மொப்பேனான் செல்லென்றாள்
அன்னவனை நோக்கி யணங்கு. 159

## முருகன் வளைச்செட்டி யாதல்

சட்டெனத் தான்மறைந்து சண்முகனும் வாலிபனுஞ்
செட்டிமகன் போலத் திரும்பியங்குக்–கட்டுவளை
தோளிற் சுமந்திட்டுத் தூயவன் போல் முன்வந்தான்
வேளைக் கோர் வேடங்கொள் வேள். 160

வங்கம ராட்டியரோ டக்கலிங்க மங்கையரின்
செங்கரத்தின் சீர்பெருக்குஞ் செவ்வளையல்–இங்குளவால்
பார்த்துமே வாங்குவாய் பாவையே நின்குறையைத்
தீர்த்துமே வாழென்றான் தேர்ந்து. 161

"எந்நாட்டி னுள்ளோரு மெக்காலும் போற்றிசெயுந்
தென்னாட்டுக் கங்கணங்கள் செம்மையாய்ப் —பொன்னலே
பொட்டுவைத்துப் பல்விதமாம் பூக்குறிக ளிட்டிழைத்த
கட்டுவளை கன்னியே காண். 162

"கண்ணைக் கவருமிவை கன்னிக் குகந்தநிவை
பெண்ணையும் பெண்ணுக்கும் பேருளவை — கண்ணுடிச்
செவ்வளையல் பச்சைவளை சீரான பொன்வளையல்
இவ்வளையல் வாங்கியணி யின்று. 163

"வளையலும்நீ வாங்கிடுவாய் மாதுனது கையிற்
களிகொளநான் சேர்த்திடுவேன் காண்பாய் — நெளி
யிடையாய்
பொன்வளையோ டிங்குள்ள பூவளையல் நீயணிந்தால்
உன்னெழிலை யாரொப்பா ரோது" 164

"கன்னிக்கென் கைமினுற் கங்கணங்கள் சூட்டினுற்
கன்னியுடன் காண்பாள் கணவனையே — இந்நிலத்தில்
ஆறுமுகச் செட்டியென்று லாரு மறிவாரே
வேறுமுகம் வேண்டாரே காண். 165

"கந்தசாமிச் செட்டியென்றுங் கண்டசிலர் கூப்பிடுவர்
சொந்தமாய்த் தேடியென்னைச் சூக்குமமாய் - கந்தனென
நண்புகொள நாடினர்க்கு நாயகனு யெந்நாளும்
பண்புடனு னாவேன் பரிந்து. 166

"கந்தச் சுவாமிக்குக் கைராசி யுண்டென்பார்
எந்தத் திசையிலுமே வந்திழையே — இந்தவளைச்
செட்டிக் கிசைந்துனது செங்காத்திற் சீராகப்
பட்டுவளை பூண்புகழப் பார்.' 167

கண்ணாடிக் கங்கணங்கள் கைவிலைசொற் கட்டழகன்
பெண்ணாளுள் முன்போந்து பேசியதுங் — கண்ணான
வள்ளிமகள் பூவளைகள் வாங்க மனமிசைந்தாள்
கள்ளமிகுங் கந்தற் குகந்து. 168

கன்னிமுனஞ் செட்டிமகன் காதலுற வீற்றிருந்து
பொன்வளைகள் தேர்ந்து பொறுக்குங்கால் — மின்ன
லெனக்
கூசுவளை பன்னூறு கூசா துடைத்தனன்
ஆசைதனிற் கைநடுக்க மாய். 169

பட்டுவளை பூட்டினான் பாவைகுற வள்ளிக்குத்
தொட்டுவளை பூட்டினான் சொந்தமாய்ச் — செட்டிமகன்
சிங்காரக் கங்கணங்கள் சீராய்க் கரஞ்சேர்த்தான்
செங்கோதை மெய்சிலிர்க்கச் செய்து. 170

சீராகச் செட்டிமகன் செங்கோதை கைப்பற்றி
ஆராத காதலுட னண்டியவள் — பாராத
அத்தருணம் பார்த்தவ் வணங்கினது கைப்புறத்தில்
முத்தமிட்டான் மோகமே மூண்டு. 171

சீறி யெழுந்தனளச் சீதேவிச் செல்வமகள்
மீறி யெழுந்தசினம் மேலிட்டுக் — கூறினாள்
"செட்டிமக னேசெல்வாய் சீக்கிரமே யிங்குன்னைக்
கட்டி யடித்திடுவார் காண்." 172

எண்ணங்கை கூடா தெழுந்தோடிச் சென்றனனே
வண்ணங்கொள் கந்த வளைச்செட்டி — கண்ணாங்
குறப்பெண்ணைக் கூடவொரு கோணவழி தேடிப்
புறப்பட்டான் நம்பி புரம். 173

## வேலன் கிழவராதல்

கண்டபொழு துள்ளங் கரையக் கழியூன்றித்
தொண்டுகிழ மான துறவியாய் – அன்டினன்
நம்பியிடஞ் சண்முகனும் நங்கைகுற வள்ளிக்கு
வம்புமிகச் செய்ய மதித்து. 174

பழமெனச்செம் மேனிகொண்டு பல்லெலாம் வீழ்ந்த
கிழமுனியைச் சேவித்துக்கிட்டிப் – பிழையிலா
நம்பி மனமகிழ்ந்து நல்லுண்டி யீந்திட்டு
எம்பணியென் னென்றான் எழுந்து. 175

மாசில் மனத்தவர்போல் மன்னவனை நோக்கியே
ஆசி யளித்தபின மம்முனிவர் – நேசமுடன்
அங்கவ னீந்த அறுசுவைதான் உண்டபினம்
இங்கிதமாய்ச் சொன்னா ரெடுத்து. 176

**கிழவர்:–**

“மனத்தின் மலமும் மனைமகவும் நீக்கித்
தனித்துத் தவம்புரிந்து தங்க – நினைத்துவந்தேன்
உன்வனமும் நாடிநான் ஒப்பற்ற மன்னவனே 177
என்மனதிற் கான திது.

“குற்றேவற் செய்யக் குறத்தி யொருத்தியைச்
சற்றேயென் தொண்டுக்குச் சாதகமாய்க் – கொற்றவா
தந்துதவி செய்யிற் றவமதுவுங் கைகூடுஞ்
சிந்தைமலம் போமே தெளிந்து. 178

“பெற்றோர்க் கருமையாம் பெண்ணொருத்தி யித்தவத்திற்
குற்றேவற் செய்யிற் குறைவிலாள் – வற்றா
நிதியடைந்து சண்முகனை நேராய் மணந்து
விதிகடந்து வாழ்ந்தடைவாள் விண். 179

நம்பி:-

“காணிற் கவணொன்று கைச்சுற்றிக் கண்டுஞ்சா
தேனற் கதிர்காக்கு மென்மகளை — யானுமக்குக்
குற்றேவற் செயயக் கொடுத்திடுவேன் தூயோரே
சற்றேனும் வேண்டாந் தவிப்பு. 180

“அந்தமுள வெண்மகளாம் ஆரமுத மாம்வள்ளி
உந்துணையா யந்தணரே ' யுற்றிடுவாள் — நொந்திடா
வந்திடுவீ ரென்னுடனே மாதினையுஞ் சேர்த்துமது
சிந்தை குளிரவைப்பேன் சென்று.” 181

என்றுரைத்து வேடுவர்கோ னின்பமிகுஞ் சாதுவுடன்
சென்றடுத்துப் பைம்புனத்தைச் சீருடனே — நின்றளித்த
வள்ளிதனை முன்னழைத்து வந்தனம்நீ செய்யென்றான்
தெள்ளியரை நன்கறியச் செய்து. 182

## வள்ளியும் கிழவனும்

நம்பி:-

வணங்குவாய் அந்தணரை வள்ளியே வந்தித்
திணங்குவாய் ஏவல் இழைக்க — அணங்கே
தனித்துத் தவம்புரியத் தள்ளாடி வந்தார்
இனித்தவரை யேற்றுக்கொள் இங்கு. 183

“இக்கிழவ ரேவல்கொள ளிங்குனக்குத் தாழ்விலையே
மிக்கவுமுன் சிந்தை விளக்கமுறும் — பக்குவமாய்த்
தாபமது தீர்ந்து தவத்தின் பலன்கிட்டிச்
சோபையுடன் வாழ்வாய் சுகித்து.” 184

வள்ளி:-

"தந்தையேயித் தாயோரைத் தாங்கிடுவே னென்சிர
மேற்
சிந்தையுந் தெள்ளியதாய்ச் சீர்பெறுவேன் — இந்தத்
தவப்பணிதான் செய்தவரின் தண்ணருளும் பெற்றே
அவப்பிணிநான் தீர்ப்பே னறிந்து." 185

"சற்றுந் தயங்காதீர் சாதுவேயிம் மாதவத்தில்
வெற்றிமிகப் பெற்றிடுவீர் வேகமென — முற்றிலுமே
இன்புமிகுத் தும்மோ டிருந்திடுவே னென்றுரைத்தாள்
அன்புமிகுத் தாங்கே யழைத்து. 186

அந்தமிகும் வள்ளிமகட் காசி மொழியுரைத்தார்
செந்தழலின் மேனிகொளுஞ் சீரியரும் — வந்தங்கு
சொல்வழி நிற்கத் துணிந்தவொரு கன்னிக்கு
நல்வழி காட்ட நயந்து. 187

நல்விடை பெற்றகன்றான் நம்பியெனு மன்னவனும்
மெல்லிடை வள்ளிதனை விட்டங்கு — தொல்கிழவர்க்
கேதேனும் வேண்டுமோ வென்றனள் ஈரமிகுஞ்
சீதேவி செல்வக் கொழுந்து. 188

கிழவர்:-

வெம்பசியால் வாடிநான் வேகமென வந்தடைந்தேன்
நம்பியேயுன் பைம்புனத்தை நாடியின்று — அம்பிகையே
வாட்டுமிந்த நோயகல வந்தெனக்கு முன்னுணவு
ஊட்டுவையோ வுள்ள முணர்ந்து." 189

வள்ளி:-

"தேனுந் தினைமாவுஞ் சேர்த்துமக்கு நான்றருவேன்
கானிற் கிடைக்குங் கனிகளுடன் – கானிடையே
வேறுணவுங் கிட்டாதே வேதியரே யென்செய்வேன்
கூறுமிது வாமோ கொள." 190

கிழவர்:-

"போதுமிது விங்கெனக்குப் பூவையே தந்தருள்வாய்
யாதுமுன்றன் பைங்காத்தா வீந்திடிலோ – மாதேகேள்
தீரும் பசியனைத்துந் தேவாமு தாயெனக்குச்
சேருஞ் சுகமனைத்துங் காண்." 191

கானிற் கிடைத்த கனிவகைக வீந்திட்டு
மானைப் பழித்த மருள்விழியாள் – தேனிற்
பிசைந்தளித்தாள் செந்தினையைப் போறிஞர்க் காங்கே
யிசைந்தளித்தாள் கையி லெடுத்து. 192

வள்ளி யளித்ததினை மாவைக் கிழமுனிவர்
அள்ளிப் புசித்திட்டார் ஆர்வமுடன் – கள்ளமாய்
மாவு மிடைச்சிக்கி மார்படைத்த தாய்விக்கித்
தாவிக் குதித்தார் தவித்து. 193

கூவிக் குரலிட்டுக் கோமகளை யக்கிழவர்
ஆவி யகலுதே அய்யய்யோ – பாவி
எனைநீயுங் கொல்ல விசைந்தாயோ விங்கு
தினையீந்தே யென்றார் சினந்து. 194

விக்கித் தவித்தார் வியர்த்தார் குதித்திட்டார்
முக்கி மருள்விழியாய் மூச்சிழுத்துக் – கக்கிப்
பதறிப் பழங்கிழவர் பாரின்மிசைத் தாட்கள்
உதறிப் புரண்டா ருருண்டு. 195

கண்டாள் கதறினாள் கண்டுமிகப் பீதியுடன்
கொண்டாள் பெருந்துயரங் கோமகளே — அண்டியவள்
இங்குமக்கு வேதியரே வேண்டுவன செப்புமென்றாள்
மங்கைமிகக் குன்றி மனம். 196

கிழவர்:—

"குடிக்கநன் னீர்கொடுப்பாய் கோமகளே நின்கரத்தாற்
கொடுக்கவிக் கொந்தளிப்புங் குன்றும் — இடுக்கணுந்
தீர்ந்துமனந் தெள்ளியதாய்ச் சீர்பெறுமாற் கொஞ்சநீர்
சார்ந்தெனையுன் மார்பணைத்துத் தா." 197

வள்ளி:—

"சுனைக்கு வருவீரேற் சுத்தநீர் கிட்டுந்
தினைப்புனத்திற் றெள்ளியநீ ரேது — எனைத்துணையாய்ப்
பற்றி யுடன்வருவீர் பாதைதரு மித்தாகம்
முற்று மகற்றிடுவீர் முன்." 198

தரையிற் றடியூன்றித் தள்ளாடு வாரைத்
தெரிவை சுனைக்கழைத்துச் சென்று — கரையின்
அருகமர்த்திப் பக்குவமாய் அந்தணரை நோக்கிப்
பருகும் நீர் என்றாள் பரிந்து. 199

தாகந் தவிர்த்திடுங்கால் தாள்தவறி யிட்டாற்போற்
சோகங் கொடுவீழ்ந்தா ரச்சுனையில் — வேகமெனக்
கைகொடுத்துத் தூக்கியெனைக் காவென்றார் வேதியரும்
வாய்விடுத்துக் கூவி வலுத்து. 200

சட்டெனக் கைகொடுத்துச் சாதுவரைத் தூக்கிமே
விட்டனள் வள்ளிமக ளின்பமுடன் — கிட்டியே
சோகமுங் கொண்டிட்ட தூயோரே சொல்லுமென்றாள்
தாகமுந் தீர்ந்ததோ தான். 201

கிழவர்:-

"தாகந் தணிந்ததிங்கு தண்மொழியாள் வள்ளியேயென்
யோகந் தணியாதே மூண்டதின்று — வேகமிருங்
காமனுமே வந்துமெய்க் காதற் கணையெறிந்தான்
கோமளமே கூடியெனைக் கொள். 202

"இணைத்தெனையு முன்னுடனே யேந்திழையே யொன்று
யணைத்துனது மார்பி லணிவாய் — பிணித்தெனையும்
வாட்டுமொரு காமத்தீ வந்தெனக்கு மிக்கணமே
ஊட்டிவையிக் காதலுக்கோ ருண்." 203

என்றுரைத்து வேதியரு மேந்திழையைக் காதலுறச்
சென்றணுக வேடர்மகள் தீதெனவே — நின்றகன்று
அந்தணரைத் தூரமிட்டு ஆராத கோபமுட
னிந்தமொழி சொன்னா ளெடுத்து. 204

"ஆசையது நீத்தவய தானகிழ மென்றெண்ணி
மோசமது போயிங்கு மூடமானேன் — பேசிடிலோ
இன்னமுநீ ரிம்மொழிக ளிங்குமக்குக் கேடுவரும்
முன்னமகல் வீரே முனைந்து. 205

"காட்டெலியை நல்விதையின் கோட்டைக்குக் காவலிட்ட
நாட்டினர்போ லாயிற்றே நம்பியும்மைக் — காட்டினிலே
என்றனையு மும்மிடத்தி விட்டகதை கேட்டிடிலோ
குன்றவருங் கொள்வார் கொதிப்பு. 206

"சுண்டுமுடற் பொக்குவாய் சொற்குழற லோடுநெடுந்
தண்டமொன்று கையூன்றித் தள்ளாடுந் — தொண்டுகிழம்
ஆராத காதலின மாதினிட மாவதெனிற்
பாரோர் நகையாரோ பார்த்து.? 207

"தொண்டுகிழ மாயுந் தொலைந்திலதோ மாதாசை
கண்டதுமோ காமங் கனிந்தவர்க்கும் – விண்டிடிலோ
இக்காமங் கண்டதிலை யெங்குமே" யென்றனள்
சுக்காகச் சுண்டினரைச் சுட்டு. 208

வள்ளிமகள் வன்மொழியில் வாட்டமுற்ற மாதவரும்
உள்ளமதிற் கள்ளமிலா வுத்தமர்போற் – கள்ளக்
குறும்புச் சிரிப்பிட்டுக் குத்திரமாய்ப் பார்த்தார்
குறப்பெண் வியப்புக் கொள. 209

**கிழவர்:–**

"வாடிக்கை யாடும் வயதான மாதவரும்
வேடிக்கை நாடிலது வீம்பாமோ – தேடிக்கான்
வந்தமுது கூத்தன் மயல்மொழியைப் பெண்சிறுமி
சிந்தை கொளலாமோ செப்பு? 210

மன்னித் திடுவாயே மாதேயென் காதலுரை
உன்னித் தெளிந்திடிலோ வொன்றுமிலை – கன்னியே
முன்போ விருந்து மொழிவாய் பழங்கதைகள்
என்பாற் கனிவா யினி." 211

**வள்ளி:–**

'வினையாகக் கொண்டேனும் வேடிக்கைக் கூற்றை
நினையாதீர் வேறாக நெஞ்சில் – எனையினிநீர்
மன்னித் திடல்வேண்டும் மாதவரே நீருமே
என்னையு முன்போல வேற்று. 212

"முன்னைக் கதையோ முதியோரே பின்னுமக்கு
என்ன கதைவேணு மிங்குரைப்பீர் – பொன்னனை
மானென்று மாமுனிவன் மால்கொண்டே யீன்றகதை
தானென்று சொல்வேன் தமக்கு." 213

கிழவர்:-

"கிழவனொரு வாலிபனாய்க் கேளிக்கை செய்த
பழமைமிகுங் காதை பகர்ந்திடுவாய் — அழகுமிகுங்
கன்னியொரு நாளவரைக் காதலித்துக் கைப்பிடித்த
வன்னமணக் கோலஞ்சொல் வந்து." 214

வள்ளி:-

கலியாணக் காதையொன்றுங் கன்னியிடம் வேண்டாம்
பலியாதும் பாசாங்கு பாரீர் — நிலையாய்த்
தவமதனை நாடித் தனித்தகல்வீ ரென்றாள்
சிவமுனிதன் பெண்ணுஞ் சினந்து. 215

கிழவர்:-

"சீறிபெழுஞ் சீற்றஞ் செழிக்கா தொழித்திடுவாய்
மீறியெழும் மாற்றம் விடுத்திடுவாய் — கூறுவாய்
மங்கையுனக் கச்சமுண்டோ மாநிலத்தி லெவ்வுயிர்க்கும்
இங்கெனக்கு மெத்த விசைந்து." 216

வள்ளி:-

"அஞ்சேன் காடிக்கும் ஆளடிக்கும் வெம்புலிக்கும்
அஞ்சேன் அரியேவந் தார்த்திடினும்—நெஞ்சினிலே
யாதுக்கு மச்சமிலை யன்புடையீ ரிந்தவள்ளி
மாதுக்கே யென்றாள் மதித்து. 217

கிழவர்:-

ஆனைக் கிலையோ சொல் அச்சமே யுன்றனக்குத்
தேனைப் பழித்திட்ட செம்மொழியால் — கானவளே
என்றதுமே பீதியுற்று ளென்றுமிலா வேக்கமுற்றாள்
குன்றிக் குறவர் கொழுந்து. 218

வள்ளி:-

அவ்விலங்கின் பேச்சை அடியோ டெடுக்காதீர்
எவ்விதமு மிங்குநீ ரொன்னிடத்துச் — செவ்வனே
கூறுவீர் வேறுமொழி கோமளமா மென்றனுளந்
'தேறவே மெத்தத் தெளிந்து'' 219

கரிமுகனைப் போற்றியிடாக் காரியங்கள் முற்றுங்
கரியெனவே யாகுமெனக் கண்டு — பெரியாரும்
பக்திமிகுத் தாங்குப் பரவசமாய் நின்றனரே
அத்திமுகத் தேவைத் துதித்து. 220

விநாயகர் துதி

"அத்தி முகத்தோனே ஆதி முதல்வோனே
சக்தி யுமையீன்ற சாமியே - பக்தியுடன்
நின்முகம் பார்த்திங்கு நின்னுதவி நாடிநின்றேன்
என்முகம் பார்த்தருள்வா யின்று. 221

"மூவர்தொழுந் தேவே முழுமுதற் றெய்வமே
தேவிதருஞ் சீர்மிகுத்த செல்வனே — சேவித்து
முற்பூசை யிட்டோர்க்கு முற்றுந் துணைபுரியுங்
கற்பகவி நாயகனே கா. 222

"தொந்திக் கணபதியைத் தூய வுளங்கொண்டு
முந்தித் தொழுது முயன்றிடுவோர் — எந்தவிதக்
குற்றமும் வாராமே கொள்பணிகள் செய்திடுவார்
வெற்றியும் பெற்றிடுவார் மேல். 223

"நாடும் நலம்பலவும் நற்றமிழின் ஞானமுடன்
கூடும் பொருளனைத்துங் கோலமுடன் — தேடிநிதம்
அஞ்சுகரத் தானைமுகன் அம்புயமாஞ் செஞ்சரணந்
தஞ்சமெனச் சார்வார் தமக்கு. 224

‘சிரித்துப் புரமெரித்த செஞ்சடையான் தானும்
விரித்துப் புகழ்ந்தேத்தும் வேந்தே — பறித்திட்டுச்
செங்கழுநீர் பூத்தூவிச் செஞ்சரணம் போற்றிசெய்தேன்
இங்கெழுவா யென்முன் இசைந்து. 225

“மனக்கவலை நீக்கியருள் மாண்புமிகுந் தேவே
உனக்குநிக ருண்டோ வுலகில் — வினைக்குளாய்
முன்னாட் புரிந்தபிழை முற்றும் பொறுத்து நீ
இன்னாட் டுணைகொள் ளெனை. 226

“கரிமுகத்துத் தூயோனைக் காலைதனிற் கண்டு
திரிகரணத் தூயோராய்ச் சேர்வார் — திருமகளின்
நோக்குற்றுப் பல்கலைகள் நுண்ணறிவு முற்றுநல்
வாக்குற்று வாழ்வார் நிலத்து. 227

“நம்பு மடியார்க்கு நற்கதிதந் தாண்டருளு
மன்பு மிகுத்திட்ட வானைமுகா — என்பிழைகள்
மன்னித் தருள்புரிந்து மாநிலத்து வாழவருள்
என்னைத் துணைகொண்டே யின்று. 228

“அண்ணா வுனக்கடிமை யானேன் கரியமுகில்
வண்ணா மணங்கூட்ட வந்தருள்வாய் — கண்ணால்
ஒருதரம்நீ நோக்கிலெனக் குற்றவினை போமே
துரிதமெனக் கொள்வாய் துணை. 229

“மானை நிகர்த்திட்ட வள்ளிக்கு மாலையிட
ஆனை நிகர்த்துவந் தாண்டருள்வாய் — எனைச்
செயலனைத்துஞ் சற்றுஞ் செழித்திலையென் செய்வேன்
தயைமிகுத்து வந்துசயந் தா. 230

"தேனுந் தினைமாவுந் தீங்கனியுஞ் சேர்த்துனக்கு
யானும் படைத்திடுவே னானைமுகா — கானிடையே
ஆர்த்துமிகச் சீறுமொரு யானை வடிவெடுத்துப்
பார்த்துவள்ளி பீதிகொளப் பார். 231

"தும்பிக்கை யானே துணைகொள்வா யிந்நேரம்
நம்பிக்கை யானேனே நானுன்மேல் — தம்பிக்கு
வாரணமாய் வந்திங்கு வள்ளியையான் கைப்பிடிக்கக்
காரணமாய் ஆவாய் கனிந்து. 232

## யானை வரவு

வேல்கொண்ட பாலன் விதியால் முதியோனாய்
மால்கொண்டு போற்றல் மதித்திட்டுக் — கால்கொண்டு
குன்றொன்று வந்தாற்போற் குஞ்சர மொன்றெழுந்து
அன்றங்கு வந்திட்ட தார்த்து. 233

ஆர்த்திட்டுக் கைதூக்கி யாடிவரு மத்திதனைப்
பார்த்திட்டுக் கன்னி பயமிஞ்சிச் — சேர்த்திட்டுக்
கட்டியம் மூதோரைக் காவென்றாள் ஆனையின்
திட்டியிற் றேகஞ் சிலிர்த்து. 234

வியர்த்தவுட லோடும் வெளுத்தமுக மோடும்
பயத்துக் கிடமானாள் பார்த்துச் — சயத்துடனே
தந்திமுக னாதரவைத் தாங்கியிறு மாந்தமுனி
இந்தமொழி சொன்னார் எடுத்து. 235

"போவென்றாற் போகும் புறங்காட்டிப் போதகமும்
வாவென்றால் வந்திடுமிவ் வாரணந்தான் — காவென்று
கத்திப் பயனிலையே கன்னியெனைக் கூடுவையேல்
அத்தியும் போமென் றறி. 236

"மாதேநீ யென்னை மணக்க விசைவாயேல்
தீதேதும் வாராது தேர்ந்திடுவாய் — வாதுசெயில்
அத்தி துதிக்கையாற் றூக்கியடித்துன்னை
மெத்த வதைக்கும் மிதித்து" 237

வஞ்சகமாய்ச் சம்மதம்போல் வள்ளி முடியசைக்கக்
குஞ்சரமு மேகியது குன்றுநாடிக் — கொஞ்சிமிக
வேதியருங் காதலுடன் வேடர்மகளைத்தழுவ
மாதுபுறஞ் சென்றாள் மறுத்து. 238

வள்ளி:-

"நன்மணமோ வேண்டும் நரைமிகுத்த சாதுவுக்கும்
என்மணமோ வேண்டுவ திங்குமக்கு — இன்னமுநீர்
எண்ணாதி ரிவ்வெண்ணம் வேதியரே நெஞ்சமும்
புண்ணாகித் துஞ்சுவதேன் போம். 239

கிழவர்:-

வஞ்சகஞ் செய்தோநீ வஞ்சித்தா யென்னையுமே
வஞ்சிப்பே னுன்னையும் வள்ளியே — கொஞ்சியெனை
வந்து மணம்புரிந்தால் மன்னிப்பே னில்லையேல்
நொந்திட வைப்பேன் நொடி. 240

வள்ளி:-

ஒருகாலால் நின்றே வுயர்தவஞ்செய் தாலும்
ஒருகாலும் நான்மணக்க வொப்பேன் — இருகாலும்
போதாது கோலூன்றிப் போகுந் தவத்தினரே
மாதாசை விட்டொழிப்பீர் வம்பு. 241

"அண்ணாவிப் பேதைமக ளாங்காரப் பேயொழியக்
கண்ணாலே பார்த்துக் கலங்கிடச்செய் - பெண்ணாள்
என்னையே வஞ்சித்தாள் ஏளனமுஞ் செய்திட்டாள்
முன்னேவா வென்றார் முனி. 242

வாவெனவே வந்ததங்கு வாரணமும் மாமலைபோற்
கோவெனவே பீதியுறக் கூவிமிக - ஆவெனவே
கத்திமிக வந்தணரைக் காவென்றாள் வள்ளிமகள்
மெத்தவுமே நெஞ்சம் நெகிழ்ந்து. 243

கிழவர்:-

"என்னைமணஞ் செய்திடிலோ ஏந்திழையே காத்திடு
வேன்
இன்னமுநீ வாதுசெயி லிக்களிறு - நின்னை
நெறித்துத் துவைத்திட்டு நின்னுயிரை நீக்கும்
குறித்துச் சடிதியிற் கூறு." 244

அத்திதனைக் கண்டுமக ளங்கமெலா மச்சமுற
மெத்தமனங் குன்றி வேலவனைப் - பக்திடயுன்
போற்றிடவே எண்ணினாள் போற்றியவள் பூவுள்ளம்
ஆற்றிடவே எண்ணினா ளன்று. 245

## முருகன் துதி

சீர்த்திமிகுங் கார்த்திகையர்ச் சேயனே செல்வனே
ஆர்த்திகளைத் தீர்த்தருளும் அண்ணலே - பார்த்தனது
பன்னிரண்டு கண்ணாலும் பாவிபடும் பாட்டையுநீ
இன்னமிங்கு வாராத தேன்? 246

அந்தமிகும் ஆறுமுகத் தேவனே மெய்யனே
கந்தனெனுஞ் சீர்மிகுத்த கற்பகமே - சொந்தமென
வேண்டியபோ தன்பருக்கு வேண்டுவன யீந்தருளும்
ஆண்டவனே வந்தெனையும் ஆள். 247

வந்தருள்வாய் வேல்முருகா மாமயில்மேல் வந்தெனக்குத்
தந்தருள்வாய் மார்தங்கு தாரின்றே — நொந்திடுமென்
அன்புக் கிரங்கியருள் ஆறுமுக மெய்ப்பொருளே
என்பக்க விந்நா ளிருந்து. 248

அச்சமெலாந் தீர்த்தெனைநீ யாண்டருள்வா யிந்நேரம்
பச்சைமயில் ஏறும் பரம்பொருளே — இச்சையுடன்
வந்துமண நூல்கொண்டு வாழவைத்துச் சீரணைத்துந்
தந்தெனைநீ சார்ந்தணைத்துக் கா. 249

பெருகாதோ பேரருடான் பேதைமுகம் பார்த்தும்
உருகாதோ பின்னுமுன துள்ளம் — வருகாதோ
என்மனமே கொள்ளைகொளு மீசனே யென்னையுமீ
நன்மணமே கொள்ளுமந் நாள். 250

காதல்மிகுங் கன்னியெனைக் கைதூக்கிக் காத்தருளிச்
சோதனைக ளற்ற சுகந்தருவாய் — ஆதரவாய்
எப்பொழுது மெங்கு மிருந்தருளு மென்னரசே
இப்போழுதே ஆட்கொள் எனை. 251

வேதனையால் வந்தடியாள் மேனி யொடுங்குங்கால்
சோதனையாற் சூடுதலுந் தூய்மையோ — நாதனே
உன்முகந்தான் நோக்காதே ஊழ்வினைசூ ழிவ்வுலகில்
எம்முகந்தான் நோக்குவே னின்று? 252

உன்னைலால் யானும் ஒருவரையும் அன்புகொளேன்
பின்னை யொருவரையான் பின்பற்றேன் — என்னரசே
சங்கடமெ லாமொழித்திவ் வேழைதனை வாழவைத்து
மங்களமெ லாமளிக்க வா. 253

எக்கணமும் நின்னருளே யென்புருகி வேண்டியயான்
இக்கிழவன் வேட்கைக் கிசைவேனோ — திக்குமிலா
என்றனோ டின்றிருந்தேன் ஏக்கமெலாந் தீர்த்தருளே
குன்றுதோ றாடுங் குகா". 254

"தாளாத் துயரதனால் தன்னடியாள் போற்றியுமோ
வாளா விருந்தான் வடிவேலன் — ஆளாதே
என்றுமிக வேங்கினாள் ஏந்திழையா ளன்றங்கு
ஒன்றுமே தோன்றா துளத்து. 255

## வள்ளி மீண்டுந் துதித்தல்

கந்தனே யன்பர்தமைக் காத்தருளுந் தெய்வமெனுஞ்
சிந்தையோ டச்சிறுமி வள்ளியும் — அந்தநாள்
போற்றினா ளாங்கே புகுந்தாற்போ லாவேசந்
தூற்றினாள் பொங்கத் துயர். 256

"உண்முகமா யுன்னை யுணர்ந்தார் ஒருதரமே
சண்முகாவென் றெதுவுஞ் சாதிப்பார் — பெண்மகள் நான்
பன்முறையுங் கூவிப் பரவசமாய்ப் போற்றி செய்தும்
என்முனம்நீ வாராத தேன்? 257

"ஈராறு காதிருந்து மென்குரல்நீ கேட்டிலையோ
ஓராறு மாமுகனே ஓதுவாய் — ஆராத
காதலுறுங் கன்னிதனைக் காத்துனது பாதமலர்
ஈதலொரு நீதியன்றோ யிங்கு? 258

எங்கேயுன் னாறுமுக மெங்கேயுன் வீரவேல்
எங்கேயுன் றோகைமயில் என்னரசே — எங்கேயுன்
கோவைக் கனியிதழிற் கொஞ்சுங் குமிண்சிரிப்புஞ்
சேவற் கொடியழகுஞ் செப்பு? 259

ஓடிவந்தே யன்பர்தமக் குற்றவினை தீர்த்தருளித்
தேடிவந்தே கைகொடுக்குஞ் சீலமெங்கே – யீடிலாய்
உன்னிரண்டு செஞ்சரணு முற்றொளித்த தெங்கேயோ
பன்னிரண்டு கையெங்கே சொல்? 260

அன்பர்க் கபயமருள் அம்புயமெங் கேமுருகா
இன்பத் திருத்துவா மெங்கேயோ — என்புருகிப்
பாடிப் பரவசமாம் பக்தர்தமக் காளாகிக்
கூடுங் குணமேங்கே கூறு. 261

வலியாரை வாட்டியருள் மாவீர மெங்கே
மெலியாரைக் காவீர மெங்கே — சலியாதே
என்கண்கட் கின்பமழை யீந்தருளுந் தண்ணொளிசேர்
உன்கண்க ளெங்கே யுரை. 262

விரும்பிச்சரண்புகுந்த மேலோர்க்கு மேலாங்
கரும்புந் துவர்க்குங் கதியைத் — தரும்பெரிய
வேலனே வேடர்மகள் வேட்கை விரும்பாது
சீலனே யெங்கணுற்றாய் செப்பு. 263

யானு மெனது மிழந்த வடியார்க்குத்
தேனும் புளித்துவிடுஞ் செம்மையருள் – கோனேகண்
முத்திக்கு வித்தாகு மூவர்தொழு மூர்த்தியே
எத்திக்கி லுள்ளா யியம்பு. 264

“வேலினற் பெற்றிடுமுன் மேன்மையிங்கு வேடர்மகள்
மாலினற் குன்றாது மாண்புறுங்காண் – சீலனே
இன்னமுநீ யென்னையுமே ஏற்கா திருந்தாயேல்
உன்னையெவர் சார்வா ருரை. 265

"சுந்தரமாய் வந்தெனக்குத் தூய்மையா முன்சரணந்
தந்திடுவாய் என்றித் தரணிவந்தேன் — கந்தனே
நின்னையே கூடிநான் நேர்மையுடன் வாழவன்றிப்
பின்னையுமிங் கேனிப் பிறப்பு. 266

"பாரா திருந்தாயேற் பார்நகைக்கு மென்வினையைத்
தீரா திருந்தாயேல் தெய்வமோநீ — வீரவேலா
உன்னைநிதந் தொழுதிடுவார்க் குற்றதுணை கொண்டிலையேற்
பின்னையுனக் கிங்கேன் பெயர்? 267

"பூவடியே பன்னாளும் பூக்கொண்டு போற்றிசெயும்
மாவடியார் கூவுங்கால் வாராயோ — சேவடிகொள்
அந்தமுளக் கந்தனே ஆறுமுகத் தேவனே
வந்தருள்வாய் வாடா மலர். 268

## வள்ளி அத்துவித ஞானமுறல்

"எங்கு மிருந்தருளு மீடற்ற சண்முகனே
இங்கு மிருந்தருள்வா யின்றிசைந்து — தங்குவாய்
மங்கையென் னுள்ளத்தும் மாமறையோ ருள்ளத்தும்
மங்களமே யீய மகிழ்ந்து. 269

இவ்வா றறுமுகனை யேத்தியுந் தூற்றியு
மவ்வா றிருக்க வணங்கன்று — செவ்வனே
அத்துவித ஞானமுற் றுச் சண்முகனை யக்கிழவர்
சித்தினிலுங் கண்டாள் தெளிந்து. 270

துதிக்கையுயர் தூக்கித் தூத்திவரத் தும்பி
கதிக்குத் துணையுளான் கண்டு விதிக்குளாய்
அம்மைகுற வள்ளியு மந்தணரை நோக்கியே
இம்மொழிகள் சொன்னா ளெடுத்து. 271

"கந்தனென வெண்ணியே கைப்பிடிப்பே னும்மைநான்
இந்தமொழி சொன்னே னிசைந்துளமும் — முந்திநீர்
அத்தி யகன்றிடவு மாணையிட்டுப் பின்னமிங்கு
இத்தினமே சேர்வீ ரெனே." 272

கிழவர்:-

பொய்யுரைத்துப் போதகமும் போகவைக்க வெண்ணி
னையோ கையடித்துக் கூறிலையேற் காத்திடேன் — நைய்
யடித்து நெஞ்சினைப் புண்ணாக்கி நின்றினியு மேங்காது
வஞ்சியெனைக் கொஞ்சிமுன் வா." 273

சத்தியமே சொன்னேன் தவநிதியே சண்முகனைச்
சித்தமதில் வைத்தும்மைச் சேர்ந்திடுவேன்— அத்தியை
முன் போவென்றே சொல்வீரே புண்ணியரே யென்னைநீர்
காவென்றே சோர்ந்தாள் கனிந்து. 274

காவெனுங் கன்னிதனைக் காத்திடவே மாமுனிவர்
போவெனவும் போயிற்றுப் போதகமும் — வாவெனவே
வள்ளிதனைக் கைப்பிடித்து மார்போ டணைத்திட்டு
உள்ளமிசைக் கொண்டா ருவப்பு. 275

## சண்முகன் தரிசனம்

மாது மறுமுறைதான் கண்டிறந்து நோக்கிடுமுன்
சாது வுருமாறிச் சண்முகனய்ச் — சோதியெனச்
செவ்வண்ண மேனியுடன் செஞ்சுடர்வேற் கையேந்தி
அவ்வணங்கு மேற்சொரிந்தா ரன்பு. 276

நோக்கமெலாம் பாய்ந்திடவும் நூதனமாம் மாதாகி
ஏக்கமெலாந் தீர்ந்த வெழிலடைந்து — ஆக்கமெலாம்
இன்பமய மாகி யிணையற்ற சீரடைந்தாள்
அன்புமய மான வணங்கு. 277

புகழ்ச்சிக் களவிலாப் புண்ணியனைக் கண்டு
மகிழ்ச்சிக் களவிலா மாது — நிகழ்ச்சியை
உன்னி யுருகியவ ளுள்ளம் புளகிதமாய்க்
கன்னி குளிர்ந்தாள் கனிந்து. 278

தாக்குண்டு தண்ணருளாற் சண்முகனும் நாயகனின்
நோக்குண்டு பூரித்த நுண்ணிடையாள் — பூக்கொண்டு
வேதமெலாம் போற்றிசெயும் மெய்ஞ்ஞான மூர்த்திமலர்ப்
பாதமதில் வீழ்ந்தாள் பணிந்து. 279

ஆசியது யீந்திட் டறுமுகனும் வள்ளிக்கு
மாசில் மனத்துடனே மாலையிட்டான்—நேசமுடன்
பன்னிரு கையாலும் பாவைதனை மார்பணைத்துக்
கன்னியொடு சேர்ந்தான் களித்து. 280

ஆறுமுகன் மார்பணைக்க ஆனந்த மாகியங்கு
வேறுமுகம் வேட்காத வேடர்மகள் - பேறுமிகத்
தன்னை மறந்தன்று சண்முகனோ டொன்றிநின்றாள்
கன்னி கழித்துக் கனிந்து. 281

சீவன் செகம்மறந்து சீராய்ச் சிவனுடனே
ஆவல் மிகுத்தொன்று மைக்கியத்தைப் — பாவிக்க
உண்ணாக்கால் தேனுண் ணும் யோகியர்க் கேயன்றி 282
வெண்ணாக்கு ளோர்க்காமோ விங்கு.

பூக்கொண்டு போற்றும் புனித மனமிருந்தும்
நாக்கொண்டு போற்றும் நயமிருந்தும் — பாக்கொண்டு
பாவிக்க வாகுமோ பாவலர்க்கு மாங்கன்று
ஆவிக்கு ளாவியுற்ற வாறு. 283

வள்ளி.-

"ஆசியது ஈந்தென்னை யாண்டருளுந் தேவேயென்
ஏசல்மொழி எதுமே ஏற்காதே — பேசினேன்
சின்னமொழி சிற்றறிவாற் போறினுன் சண்முகன்பால்
என்னமதி யீந்தா யெனக்கு? 284

"முன்னமொரு வார்த்தை மொழிந்திருக்க லாகாதா
என்னவிளை யாடலேநீ யிங்கிழைத்தாய்— உன்னையும்நான்
கன்னியா யுள்ளங் கனியாது சொன்னதெலாம்
மன்னிப்பாய் வேலோய் மதித்து. 285

"சோதனைகள் செய்துநீ தும்பிக்கை யான்கொண்டு
வேதனைகள் தந்துன்னை வேட்கவைத்தாய் — மாதுநான்
சண்முகனென் றோராது சாற்றினேன் தீமொழிகள்
புண்மிகுஞ் செய்கை புரிந்து. 286

"தீமை புரிந்தவர்க்குஞ் சீர்ப்பாதம் தந்தருளுன்
மேன்மையை யெவ்வாறு விண்டுரைப்பேன் – நேமமுடன்
வந்துன்னை வைதாரை வாழவைத்தாய் சண்முகனே
இந்தவிதம் ஆள்வார் எவர்? 287

சண்முகன்:-

"பக்குவ மாகுமுனம் பக்தர்தமக் கென்னரிய
நிற்குண ரூபம் நிலேக்காதால் – தக்க
சிறுலீலே காட்டியபின் தெள்ளியரா யன்பர் 288
பெறுவர் பெறலரிதாம் பேறு.

"போதனையும் போதாதார் பூவுலகில் தெய்வந்தான்
சேதனையுஞ் செய்குதென்று சொல்லுவரே– மாதேகேள்
பக்குவமு மானோர்கள் பாரிற் பயமொழிந்து
துக்கமற வாழ்வர் சுகித்து. 289

"வேதனைதான் முன்செய்த வெவ்வினையால் வந்த
தலால்
சோதனையிங் கேதுமிலை சுத்தருக்குப் — பூதலத்தில்
எந்தவினை வந்திடினு மென்னடியார்க் காளாகி
வந்தவினை தீர்ப்பேன் மதி. 290

"சார்ந்தெனது பாதமதே தஞ்சமெனு மன்பர்தமைச்
சேர்ந்தவர்க்கு மங்களமே செய்திடுவேன் —தேர்ந்திடுவாய்
பக்திவிழி கொண்டோரே பார்த்திடுவார் என்னுருவை
முக்திவழி வேண்டார்காண் வேறு" 291

வானிலத்தை விட்டகன்று வள்ளிதனை வேட்டன்று
மாநிலத்து வந்த வடிவேலன் — கானிலத்தில்
மின்னலொளி மாதை விடுத்தகல வெண்ணினான் 292
தன்னிலமே சேரத் தனித்து.

நாடிக் கனிய நலங்கொடுத்த சண்முகனைக்
கூடிப் பிரியமனங் கொள்ளாது — தேடி
உடலடுத் துள்ளின்ப மூட்டியவென் னுதா
உடழினடுத் தேகென்று ளுர். 293

வள்ளி.—

"பெண்மணியா மென்னைநீ விட்டுப் பிரியவெண்ணி
விண்முகமே நோக்கிடலு மேன்மையோ — சண்முகா
நீயலால் நாணிற்க நீழலே திங்குரைப்பாய்
தாயலால் வாழ்ந்திடுமோ சேய்" 294

சண்முகன்:—

"எங்குதலும் விட்டொழிவாய் ஏந்திழையே யானு முனை
மாங்கலிய மிட்டு மணந்திடுவேன் — பாங்குடனே
அந்தநாள் வந்திடுமுன் யார்க்குந் தெரியாதே
வந்துநான் போவேன் மதி. 295

"நோக்கும் நினைவதுவும் நோன்புடனுன் பால்வைத்துப்
போக்கும் வரவும் புரிந்திருப்பேன் — எக்கம்
சிறிதேனும் வேண்டாமே சிதேவி யீன்ற
குறமாதே நிம்மதிநீ கொள். 296

"நான்வந் துடன்கலந்து நல்லின்பங் கண்டதையும்
மான்தந்த மாதே மறைத்திடுவாய் — யான்வந்த
இச்செய்தி யார்க்கு மியம்பாதே பின்னொருநாள்
அச்சமறச் செல்வே னழைத்து. 297

"உடனழைத்துச் செல்லுநாள் உண்டெனநீ தேர்வாய்
கடனுனையும் யானிங்கு காத்தல் — திடமுடனே
சுற்றமுடன் வாழ்வாய் சுகமேநீ யிந்நாட்டிற்
பற்றகலப் போற்றிடவிப் பார். 298

"எனையோர் பார்த்திடநா னிங்கிருத்த லாகாது
தேனினு மிக்கினிய தெள்ளமுதே — கானையும் நான்
விட்டகல வேண்டும் விரைவினில் வேடுவருங்
கிட்டவரு முன்னமென்றான் வேள். 299

அறுமுகனின் தண்மொழியா லானந்த மாகி
மறுமுறையும் வள்ளி வணங்க — அறுமுகனும்
விண்ணில் மறைந்தனனே வேல்மயில் தம்முடனே
மண்ணில் மறமகளை விட்டு. 300

உலகொலாந் தான்வெறுத்த வுள்ளமுட னின்றாள்
நலமெலா மிக்கவொரு நங்கை — தலமெலாந்
தேடிவருஞ் சீர்மிகுத்த சேடியருந் தேவிதனை
வாடியுடற் கண்டார் வனத்து. 301

கண்கலங்கிச் சீர்குலைந்த கட்டுடையும் மார்பிலொரு
கண்கவரும் மாலையதுங் கண்டவுடன் – பெண்களங்கு
கள்ளக் கணவனுடன் காதலுற்றாள் மாதெனவே
வள்ளிதனைக் கேட்டார் வகை. 302

சேடியர்:-

"பெண்களொரு காதலனைப் பெற்றின்பங் கண்டது போற்
கண்கலங்கி நின்றதின் காரணமென் – கண்மணியே
சீலை நலங்கியது மேனிங்கு செப்புவாய்
மாலை விளங்கியதுன் மார்பு. 303

"கானிற் கணவனையுங் காணாது கண்டனையோ
வானில் மதியு மயலெழுப்ப – ஏனல்தான்
காக்கின்றே னென்று கணவனைத் தேடவொரு
போக்கொன்றோ சொன்னாய் புகல். 304

"தவம்புரிய வந்தவொரு சாதகரு மெங்கே
உவந்துநீ யெங்கட் குரைப்பாய் – தவஞ்செய்
கிழவருமோ வாலிபனாய்க் கேளிக்கை செய்தார்
அழகியுனக் கின்ப மளித்து? 305

"எங்களுக் கின்றே யெடுத்துரைப்பாய் ஏந்திழையே
இங்குனைக் கைப்பிடித்தான் யாவனெனச்–சங்கையற
மற்றவர்க்குக் கூறு மருமந்தான் உள்ளமதி 306
லுற்றுனையும் வாட்டு முணர்"

வள்ளி:-

"வேலவனை யெண்ணியிர வெல்லாம் விழித்தனு
காலைதனிற் கண்சிவந்து கண்டீர்கள் – சீலையதும்
யான்கண்ட மெய்க்கனவா லிங்குநலங் கிற்றல்லால்
நான்வேறு காணேன் நலங்கு. 307

"மாயமிகு மாமுனிவர் மாயமாய்ப் போயினர்
காயமொடு நல்லின்பங் கண்டதன்பின் — நாயகனும்
வேறெனக் கிங்கேது வேடிக்கை செய்யாதீர்
தேறுவீர் மெய்யைத் தெரிந்து. 308

"கேலியொன்றுஞ் செய்யாதீர் கேவலமா யெண்ணி யெனை
வேலவனை யுன்னி விழித்திடுங்கால் — மாலினால்
மாறுதலை யுற்றமனம் மாலையிட்டுத் தேற்றினேன்
ஆறுதலை தந்திடவே யங்கு." 309

மீண்டும் புனங்காக்க வேடர்குலச் சேடியரும்
வேண்டக் குறமகளும் மேற்கொண்டாள் — ஆண்டவன்
சண்முகனுக் கர்ப்பணமாய்த் தன்பணிகள் செய்திட்டாள்
உண்முகமாய் நின்றே யுணர்ந்து. 310

கந்தவேள் வள்ளிதனைக் கள்ளமாய்க் கண்டுநிதம்
வந்துபோம் வண்ணம் மகிழ்ந்திருக்க — விந்தையாய்
வேலுடையான் பன்னாளே மீளா திருந்திடவும்
நூலிடையாள் வாடினாள் நொந்து. 311

பித்தம் பிடித்தவள் போற் பேதைகுற வள்ளியும்
நித்தஞ் சரவணன்பால் நெஞ்சுருகி — மெத்த
உயிர்களையும் ஓங்குந் தருக்களையும் கேட்டாள்
மயிலவன் சென்ற வழி. 312

## வள்ளி சண்முகனைத் தேடல்

"மெத்த வெருட்டியெனை மெய்க்காதல் கூட்டுவித்த
அத்திநீ கண்டாயோ வக்குகனை — சத்தியமாய்க்
கண்டிருந்தாற் செப்பிடுவாய் காமமிகுங் கான்மகட்கே
எண்டிசையி லெங்குளா னென்று. 313

"வண்டினங்காள் கண்டீரோ மார்கடப்பங் கொண்டானைக்
கண்டிருந்தாற் சொல்வீரோ காரிகைக்கு — அண்டியும்நீர்
செம்மதுவு முண்டிருந்தாற் சீர்மிகுத்த சண்முகனும்
எம்மலையி லுள்ளா னென. 314

புள்ளினங்காள் கண்டீரோ போம்வழியில் வேலவனைக்
கள்ளமிலா தோதுவீர் கண்டிருந்தால் — வள்ளிக்கு
மாலையிட்டுப் போனவனும் மாமரங்கள் நிற்கின்ற
சோலைகளுட் புக்கானோ சோர்ந்து.? 315

நீண்ட நிழல்விட்டு நிற்கின்ற மாமரங்காள்
வேண்டிநிழல் வந்தானோ வேலவனும் — ஆண்டென்னை
விந்தையாய் மாலையிட்டு வேல்பிடித்துப் போனானும்
வந்தானோ இந்த வழி.? 316

கண்டீரோ மாமயில்காள் கானமயில் வாகனனைக்
கண்டீரோ பைங்குயில்காள் கந்தனையுங் — கண்டீரேல்
சென்றவிடஞ் செப்பிடுவீர் சீராய்ச் சிறகினங்காள்
என்றனிட மன்பாகி யின்று. 317

"கானமிசைக் கன்னிதனைக் கைப்பிடித்த சண்முகனும்
போனதிசை சொல்வீரோ புல்வாய்கள் — யானிசையக்
கூத்தனைத்துஞ் செய்திட்டுக் கூடிக் குலவியெனைச்
சேர்த்தணைத்தான் மெய்சிலிர்க்கச் செய்து. 318

"செங்கதிர்வேற் சண்முகனுஞ் சென்றவிடஞ் செப்பாயோ
செங்கதிரை வானழைக்குஞ் சேவலே — இங்கவனோ
சேவற் கொடியுடையான் செஞ்சுடராம் மேனியுளான்
பாவையெனை யாண்ட பரன். 319

ஓடுவாள் சண்முகனை யோரிடத்துக் கண்டாற்போல்
தேடுவாள் நாயகனைத் திக்கெங்கும் — பாடுவாள்
கந்தன் திருப்புகழே காலையிலும் மாலையிலுஞ்
சந்தம் பிறழாத வாறு. 320

அம்மா வெனவழைப்பா ளங்குத்தன் சேடியரைச்
சும்மா விருந்திடுவாள் சொல்லென்றால் — பெம்மானவ்
வேலவனை யுன்னிநிதம் வேளைதனி லுண்ணாது
சாலவுடல் வாட்டமுற்றாள் மாது. 321

வாடியெனச் சேடியரைக் கூவிடுவாள் வந்திட்டாற்
போடியெனச் செப்பிப் புடைத்திடுவாள் — தேடிநீ
சண்முகனைக் கொண்டுவந்தால் தந்திடுவே னிங்குனக்குப்
பொன்மிகவே யென்பளொரு போது. 322

வாடி யுடல்மெலிந்த வள்ளிதனைக் கொண்டொருநாள்
சேடியரும் நம்பியிலஞ் சேர்த்திடவும் — ஓடியங்கு
மார்பணைத்து முத்தமிட்டாள் மங்கைதனை மோகினியாள்
ஆர்வமுடன் வந்தா ளரசு. 323

"வாடிய தேனுரைப்பாய் வள்ளியே மாநிலத்துத்
தேடிய வேதேனுஞ் சிக்கிலையோ — நாடிய
எப்பொருடான் கிட்டிலையென் றின்பமுட னிங்கெனக்குச்
செப்பிடுவாய்" என்றான் தெளிந்து. 324

எந்தையே யிங்கெனக் கேதுமில்லை நோயறிவாய்
விந்தையே யானு மெலிந்ததுமே — சொந்தமாய்
உள்ளிருந்த மெய்ப்பொருடான் ஒருருவாய் வந்தென்னைக்
கள்ளமுடன் கூடிற்றே கண்டு. 325

பிதற்றுகிறு ளிங்கிவளும் பேய்பிடித்தாற் போன்றே
இதற்கென் னிழைப்பதென வேங்கிப் — பதற்றமுடன்
சோதிடரைக் கூவியே சொல்லுமென்றுன் வேடர்கோன்
மாதினிடர்வந்த வகை. 326

நாடுவோம் நம்தெய்வம் நாடிச் சிரத்தையொடு
போடுவோம் அன்புமிகப் பூசனைகள் — தேடுவோம்
மங்கைமகள் வள்ளியின் மாயப் பிணியகற்ற
இங்குவகை யென்றுனிறை. 327

ஆசைமிகச் சண்முகனுக் கத்தினமே வேடுவர்கள்
பூசைமிகப் போட்டெழுந்து போற்றினர் — நேசமிகும்
ஆங்குமோ ராண்மகனுக் காவேசந் தோன்றிடவும்
பாங்குடனே சூழ்ந்தார் பலர். 328

ஆர்த்துக் குதித்திடு மாவேச மானவரைப்
பார்த்துப் பயம்விஞ்சிப் பார்வேந்தன் — நேர்த்திமிகும்
வள்ளிக்கு மிந்தவினை வந்தவகை யெங்கட்கு
விள்ளுவீர் என்றுன் வியர்த்து. 329

தேவியைச் சார்ந்தவனுஞ் செஞ்சுடர்வேற் சண்முகனே
பூவில் மணமும் புகுந்தாற்போற் — கோவேநீ
நம்புவா யுங்கட்கு நன்றிதுவென் றோதியது
அன்புகொண் டாவேச மன்று. 330

எம்பிழைக ளேற்காதீ ரீசனே யென்றுரைத்தார்
நம்பியுடன் வேடர் நயமுடனே — தெம்புடனே
ஆடிக் குதித்திட்டார் ஆடவரு மாதருடன்
கூடிக் களித்திட்டான் கோ. 331

குறவான்று செய்திட்ட கூத்ததனைக் கண்டு
குறுமுறுவல் கொண்டக் குறமான் — குறியாகக்
கந்தன் கழலுன்னிக் காலங் கழித்தனளே
எந்தத் தினம்வருவா னென்று. 332

## வேலன் வள்ளியைத் திருடிப்போதல்

நள்ளிரவு நேரமொரு நாள்வந்து வேலவனும்
வள்ளியிடந் தேடி வழியிலா — துள்ளடையக்
கள்ளமிகுங் காதலனுய்க் கன்னமிட் டுட்புகுந்து
வள்ளிமுகங் கண்டான் மகிழ்ந்து. 333

காந்தமதைக் கண்டவொரு வூசியெனப் பாய்ந்தனளே
காந்தனையுங் கண்டவக் காதலியும் — ஏந்திழையாள்
ஆசைதனுக் காளா யறுமுகனு மார்பணைத்தே
ஆசியது யீந்தா னவட்கு. 334

"வேடர் விழித்திடுமுன் வேகமென வந்திடுவாய்
காடருங் கண்டாற் கலகமிங்காம் — கூடநான்
சொந்தமாய் உன்னையுந் தூக்கிமயில் மீதொளிரும்
அந்தகா ளீதென் றறி. 335

"தோகை மயிலொன்று தூரத்திற் காத்துளது
வேக மெனச்செல்ல வேந்திழையே — ஏகுவோம்
சீக்கிரமே யிங்குவிட்டுச் சேவகரின் கூட்டமெலாம்
தூக்கம் விடுத்தெழுமுன் இங்கு. 336

என்றுரைத்துச் சீருடனே ஏந்திழையாள் கைப்பிடித்துக்
குன்றுறைந்து வாழுங் குமரனுஞ் — சென்றடைந்தான்
காரிருளிற் கானவர்கோன் காவலரண் தாண்டியே
ஆருமறி யாதவா றன்று. 337

காலைதனிற் கண்விழித்துக் கன்னிதனைக் காணாது
வேலைமக்கள் பல்லோர் விரைந்தோடிச் — சோலையிலும்
கொல்லையிலுந் தொல்லையுள குன்றினிலுந் தேடியபின்
அல்லல்மிக வுற்றா னரசு. 338

கன்னிதனைக் கொண்டுசென்ற கள்வனையுங் காணாது
இன்னமுநான் வாளா விருப்பேனோ — என்னினத்தீர்
கேளுமே வள்ளுவரைக் கேட்டுமகள் சென்றவழி
மீளுமே வேகமென்றான் வேந்து. 339

வள்ளுவரைக் கேட்டவரின் வாய்வந்த வாறேபோய்
வள்ளிதனைத் தேடினான் மன்னவனுந் — துள்ளினனே
கானிடையே தன்மகளைக் கட்டியொரு வேல்கொண்ட
மானிடனே போதல் மதித்து. 340

பார்த்துப் பதைத்துப் படபடத்துப் பார்வேந்தன்
ஆர்த்துக் குறவர்களை யங்கழைத்துச் — சேர்ந்தொன்றாய்
எய்திடுவீ ரம்புகளை யித்திருடன் வெந்தலையைக்
கொய்திடுவீ ரென்றானக் கோ. 341

ஆணை பிறந்திடவும் அம்புகளும் பாய்ந்தனவே
வீணே குறமகளை வேட்டவன்பாற் — காணாத
தீரமுடன் சண்முகனுந் தேவிதனைப் பின்வைத்து
வீரமுடன் வீசினன் வேல். 342

ஆர்த்துமே வந்தவே லாங்குற்ற வேடுவரைப்
பார்த்துமே வந்தவர்மேற் பாய்ந்தங்கு — பீர்த்து
இரத்தமு மாறாக எங்கணுமே யோடத்
தூரத்தியே கொன்றது சுட்டு. 343

கார்த்திகையன் பின்புற்றுக் கண்ணிமையா தப்போரைப்
பார்த்திருந்த வள்ளி பயங்கொளவே — ஆர்த்துவந்த
வேலுக் கிரையாய் விரைவி லொழிந்ததே
கோலக் குறவர் குலம். 344

வேல்பட் டழிந்திட்ட வேடர்குலம் நோக்கியே
வாள்வெட் டடைந்ததே வள்ளிமனம் — கால்தொட்டு
ஆவென்று கூவி யறுமுகனே யென்குலத்தைக்
காவென்றாள் வள்ளி கசிந்து. 345

வள்ளி

"மதியிலார் நின்சீர் வடிவமதைக் காணு
விதியினாற் போர்புரிந்தார் வேடர் — பதியே
பிழைத்திடவே வைப்பாயிப் பேதையரை யின்றேற்
பழித்திடுமே யென்னையுமிப் பார். 346

"அன்னையுந் தந்தையும் அண்ணனும் மாய்ந்திடப்
பின்னையும் பேதை பிழைப்பதுவோ — என்னே
விரும்பிடிவ் வேடருயிர் மீட்டருளி யிந்தப்
பெரும்பழி நீக்கியெனைப் பேண்" 347

குன்றைத் துளைத்தவேல் குன்றவரைக் கொன்றதெனை
நன்றறிந்து வானிருந்து நாரதருங் — குன்றிமனம்
வேடருயிர் பெற்றெழுந்து மேதினியில் வாழவெனத்
தேடிவந்தார் சண்முகன்பா லன்று. 348

நாரதர்:—

"மணக்கோலம் வேண்டிநீர் வள்ளிதனை வேட்டீர்
பிணக்கோலஞ் செய்தீர் பிழையே — குணக்குன்றே
ஆருயிர் தந்தவரை ஆட்கொண்டு வள்ளிதனைச்
சீருடனேமணப்பீர் சென்று." 349

மால் கொண்ட தன்னடியார் மன்றாடி வேண்டியபின்
வேல்கொண்டா னீயானே வேண்டுவன — வேல்கொண்ட
ஆருயிரை யன்றெயினர்க் கன்பா யளித்தனனே
பாருயார வேலன் பரிந்து. 350

பார்த்துப் பரவசமாய்ப் பார்புகழும் வேலவனைச்
சேர்த்துக் களித்தணைத்தாள் தேவியும் — கீர்த்தியுடன்
புத்துயிர் பெற்றே புனிதனடி போற்றினர்
பக்தியுடன் வேடர் பணிந்து. 351

எம்பிழைக ளேற்காதீ ரீசனே யென்றனர்
நம்பியுடன் வேடர் நயமுடனே — அன்புடனே
மங்களநூல் கொண்டு மணந்திடுவீர் வள்ளிதனை
எங்களூர்வந் தென்றா னிறை. 352

சீலமிகு வள்ளியுடன் சேர்ந்தன்று சித்தூர்க்கு
வேலவனுஞ் சென்றனன் வேண்டிமணம் — கோலமுடன்
தோரணமுஞ் செங்கொடியுந் தோன்றிப் பறந்தனவே
பூரணச்சீர் கொண்ட புரத்து. 353

கண்டதுமே கண்ணைக் கவருங் கலியாண
மண்டபமே சோடித்தான் மன்னவனும் — விண்டிடிலோ
இச்சகத்திற் கண்டிலை யிச்சீரை யென்றனர்
மெச்சியதைக் காடர் மிக. 354

அந்தணரும் வந்தாங் கருமறைகள் சாற்றியெங்கு
மந்திரமும் ஓதமணப் பந்தலிலே — அந்தமுடன்
மங்கையருஞ் சீர்கொண்டு வந்துமண நூல் கொண்டு
மங்களமுஞ் சொன்னார் மகிழ்ந்து. 355

திருமணச் சேவைசெயத் தேவியொடு பெம்மான்
திருமகளும் மாலோனுஞ் சீராய்ப் – பிரமனுந்
தேவருட னிந்திரனும் தேவமுனி நாரதரும்
ஆவலுடன் கூடினு ராங்கு. 356

ஓமத்தீ முன்பிருந் துத்தமியை நல்லதொரு
சாமத்திற் கைப்பிடித்தான் சண்முகனும் – நாமத்தைச்
செப்பிடு மன்பருக்குச் சீரா யிகபரமும்
ஒப்பரிய வாழ்வருள வோர்ந்து. 357

மாலோனும் பூமகளு மற்றுமுளத் தேவர்களுங்
கோலா கலத்துடனே கூடியதும் – வேலோனும்
ஆங்குற்றார் ஆர்வமுடன் போற்றிடவும் வள்ளிக்கு
மாங்கலிய மிட்டான் மகிழ்ந்து. 358

போற்றிடத் தேவரெலாம் பூமாரி பெய்திட்டுப்
போற்றிடப் பக்தர்குழாம் பூரித்துச் — சாற்றிடவே
சந்தத் திருப்புகழ்கள் சண்முகனும் வள்ளிதனை
அந்தத் துடன்மணந்தான் அன்று. 359

வாழவே வையகம் வாழவே ஆனினம்
வாழவே அந்தணரும் மாதவரும்—வாழவே
தங்கவேல் கைப்பிடித்துச் சண்முகனும் வள்ளிதனை
மங்களமாய் வைத்தான் வலம். 360

## மங்களம்

மங்களமே வள்ளிக்கு மங்களமே சண்முகற்கு
மங்களமே மாமயிலோ னன்பர்க்கும் – மங்களமாய்
எங்குமே வள்ளிமணம் ஏத்தி யிசைப்பார்க்குப்
பொங்கும் அருளுடன்பொன்.

சுபம் 361

## நூற் பயன்

### கட்டளைக் கலிப்பா

(1) வள்ளி யின்மண வெண்பா வினைத்தினம்
மக்கள் யாவருங் காலையு மாலையும்
உள்ளத் தூய்மைகொண் டோதிடு வாரெனின்
உற்ற நோய்க ளொழிந்துல கத்தினில்
வெள்ள மாய்வடி வேல னருளுடன்
மேன்மை பெற்றுத் திருமக ளைக்கொடு
தெள்ளு மொண்கவி செப்புஞ் சீருடன்
தேவ ராகித் திகழ்ந்தவர் வாழ்வரே

(2) காலை மாலையுங் கன்னிகள் யாவரும்
கந்தன் வள்ளியை நன்மணஞ் செய்தவிந்
நூலை யுள்ளத் தெளிவுட னோதியே
நோன்பு கொண்டிர விற்புசி யாமலே
பாலை யுண்டுப கற்றுயில் நீக்கியே
பக்தி கொண்டுமு ருகனைப் போற்றிடில்
வேல னிச்சையால் வேண்டுங் கணவனை
மேன்மை பெற்றும ணந்துக ளிப்பரே

O26:31
N52

சுபம்

Printed at Ramani Press, Mylapore.

# காமாக்ஷி தாஸர் இயற்றிய

## இதர நூல்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீமத் பகவத் கீதை பொருட்பா! காமகோடி பீடம் சங்கராசாரியார் திருமுகமும் வித்வான்கள் பாராட்டும் பெற்ற இனிய தமிழ் பாக்களால் பாராயணத்திற் குரிய சரியான மொழி பெயர்ப்பு தமிழ் மக்களுக்கு இன்றியமையாதது | ... 2 | 0 | 0 |
| 2. | ஸ்ரீ காமாக்ஷி திருப்புகழ் பெரிய 2-ம பதிப்பு (அச்சில்) | ... 2 | 0 | 0 |
| 3. | அம்பாள் அஷ்டகாமாலை (சற்று பழமையானது) | ... 1 | 0 | 0 |
| 4. | அம்பாள் திருவகுப்பு (சற்று பழமையானது) | ... 1 | 0 | 0 |
| 5. | தேவி கிளித் தூது சதகம் (அச்சில்) | ... 0 | 12 | 0 |
| 6. | காமாக்ஷி தண்டகம் (அச்சில்) | ... 0 | 4 | 0 |
| 7. | சௌந்தர்யலகரி மொழி பெயர்ப்புப் பாக்கள் | ... 0 | 12 | 0 |
| 8. | அம்பாள் அலங்காரம் அனுபூதி | ... 0 | 4 | 0 |
| 9. | அப்பாள் திருப்பள்ளி எழுசசி, குங்குமப் பஞ்சதசி | ... 0 | 4 | 0 |
| 10. | அம்பாள் கவசம், தாலாட்டு, போற்றி வாழ்த்து, உந்தியார் | ... 0 | 8 | 0 |
| 11. | அமபாள் அருட்பார்வை | ... 0 | 4 | 0 |
| 12. | ஸ்ரீ வெங்கடேசாஷ்டகமும் பார்த்தசாரதி பஞ்சரத்னமும் | ... 0 | 4 | 0 |

SCANNED

SCANNED

கிடைக்குமிடம்:-

(1) காமாக்ஷி தாஸர் R. சோமசுந்தரம் அய்யர்,
அட்வகேட்,
10-ஜி, எட்வர்டு எலியட்ஸ் ரோடு,
மயிலாப்பூர், சென்னை.

(2) ரமணி பிரஸ், பண்டாரபீசு தெரு,
மயிலாப்பூர், சென்னை.

Printed at Ramani Press, Mylapore